UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICAL DIVISION

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021-222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர்: 136 இதழ்: 13 பக்கங்கள்: 08 திகதி 19-08-2012 விலை: 15.00

## நாங்கள் இராணுவத்தால் சூழப்பட்டிருக்கிறோம்

**- மக்களின் இயல்பு வாழ்க்கை முழுமையாக பாதிப்பு -**

போருக்குப் பின் தமிழர் பகுதிகளில் இருந்துவரும் இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்படும் என எதிர்பார்த்தோம். ஆனால் அப்படி நடக்கவில்லை, இராணுவம் மேலும் அதிகமாகக் குவிக்கப்பட்டிருக்கிறது. அது மக்களின் இயல்பு வாழ்க்கையை முழுமையாக பாதிக்கிறது. யாப்பாணத்தை மட்டும் கிட்டத்தட்ட நாற்பதினாயிரம் இரா னுவத்தினர் சூழ்ந்திருக்கிறார்கள். இவ்வாறு யாழ் ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.



தமிழ் மக்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டபோதும் முகாம்களில் அடைக்கப்பட்டுப் பல்வேறு இன்னல்களுக்குள்ளானபோதும் யாழ் ஆயர் இல்லம் ஏதாவது அறிக்கை விடாதா, வத்திக்கான் எங்களுக்கு ஏதாவது உதவாதா என்று தமிழ் மக்கள் ஏங்கிக்கொண்டிருந்தனர். யாழ் ஆயர் இல்லம் தமிழ் மக்கள் நிலை குறித்துத் தொடர்ந்து பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டது. யுத்தத்திற்குப் பிறகு, இப்போது அம்மக்களின் நிலை குறித்து நீங்கள் அக்கறை காட்டிவருகிறீர்களா? வடக்குப் பகுதியில் வாழும் தமிழ் மக்களின் தற்போதைய நிலை என்ன?

யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் முடிந்து விட்டன. இத்தறுவாயில் இன்னும் அங்கு வாழும் மக்கள் அமைதியான சூழலில் வாழ்வதுபோலத் தோன்ற வில்லை. முக்கியமாக வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா அகதி முகாம்களில் வைக்கப்பட்டிருந்த, கிட்டத்தட்ட இரண்டரை இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அவரவர் இடங்களுக்குப் போக வேண்டும். ஆனால் அதற்குப் பல தடைகள் இருந்தன. ஆனால் இப்போது கிட்டத்தட்ட எண்பது சதவீத மக்கள் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பியிருக்கிறார்கள். ஆனால் அங்கே அவர்கள் அமைதியாக வாழ்கிறார்கள் என்று சொல்ல முடியாது. பலவிதமான கட்டுப்பாடுகளுக்கும் நெருக்கடிகளுக்குமிடையேதான் அவர்கள் வாழ வேண்டியிருக்கிறது. மீள்குடியேற்றம் என்பது முழுமையானதாக இருக்க வேண்டும்.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

## தொடர்ந்தும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும், அநீதிக்கு எதிராகவும் குரல் கொடுப்பேன்

**- மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு-**



சர்ச்சைக்குரிய விடயங்கள் பற்றி பேசுவதன் காரணமாக எனக்கு எதிராக விமர்சனங்கள் செய்யப் படுகின்றன. வறுமையில் வாடுவோருக்காகவும், நீதிக்காகவும் குரல் கொடுத தால் என்னைப் பிரிவினை வாதி, விடுதலைப்புலி ஆதர வாளர், சர்ச்சைக்குரிய ஆயர் என்றெல்லாம் குற்றம் சுமத்துகின்றனர். இவ் வாறான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நான் கவலைப் படப்போவதில்லை. தொடர்ந் தும் மனித உரிமை மீறல் களுக்கு எதிராகவும், அநீதிக்கு எதிராகவும் குரல் கொடுப்பேன்.

அதிகாரிகள் உரிய முறையில் இன சமூகங்களுக்கு சேவையாற்ற வேண்டும். அவர்கள் இன சமூகங்களுக்கு இடை யில் பிரிவினைகளை ஏற்படுத்தக் கூடாது. உண்மைக்காகவும் நீதிக்காகவும் குரல் கொடுக்கும் காரணத்தினால் என்னை சர்ச்சைக்குரிய நபராக சிலர் கருதுகின்றனர்.

யுத்த காலத்தில் இடம்பெற்ற உயிரிழப்புக்கள் தொடர் பில் சரியான விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை முழுமை யாக அமுல்படுத்தப்பட வேண்டும். ஒரே இலங்கைக்குள் பல்லின மக்களும் வாழக்கூடிய ஓர் பின்னனி உருவாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது. இவ்வாறு மன்னார் ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை அவர்கள் ஊடகங்களுக்கு வழங்கிய செய்தியில் தெரிவித்துள்ளார்.

## மடுத்திருப்பதியின் ஆவணிப் பெருவிழா



மடுத்திருப்பதியின் ஆவணித் திருவிழா இம்மாதம் 6ஆம் திகதி கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தினமும் ஆராதனைகள் நடைபெற்றன. மரியன்னை விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திரு விழாவாகிய ஆவணி 15ஆம் திகதி புதன் கிழமை அன்று ஆவணித் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு இடம்பெற்ற பெரு விழாத் திருப்பலியானது தமிழ், சிங்களம், ஆங்கிலம், இலத்தீன் ஆகிய மொழிகள் இணைந்த தாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை தலை மையில் இடம்பெற்ற திரு விழாத் திருப்பலியில் கண்டி மறைமாவட்ட ஆயர் மேதகு வியான்னி பெனாண்டோ ஆண்டகை, காலி மறைமாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரம சிங்க ஆண்டகை, அநுராதபுர மறைமாவட்ட ஆயர் மேதகு நோபேட் அன்றாடி ஆண்டகை, கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு மக்ஸ் வெல் சில்வா ஆண்டகை ஆகியோரும் பங்கெடுத்தனர். திரு விழாத்திருப்பலியைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச்சுருவப் பவனியும் திருச் சுருப ஆசீரும் இடம்பெற்றது.

திருவிழாவுக்கு முதல் நாள் ஆவணி 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நற்கருணை தினமாகும். அன்றைய நாள் மாலை வழிபாடுகள் 6.15 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்ப மாகியது. அன்றைய தினம் நற்கருணை ஆராதனை, மறையுரைகள் தமிழ் சிங்கள மொழிகளில் இடம்பெற்றன. நற்கருணைப் பவனி, நற் கருணை ஆசீர் ஆகியவை யும் இடம்பெற்றன.

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

## மேய்ப்புப்பணி பேரவைகளுக்கான கையேடு வெளியிடப்பட்டுள்ளது

யாழ் மறைமாவட்டத்தில் அமைக்கப்பட வேண்டிய மேய்ப்புப்பணி பேரவைகளுக்கான விதிகள் அடங்கிய கையேடு வெளியிடப்பட்டுள்ளது. இக்கையேட்டு விதி களுக்கமைய ஆலய, பங்கு, மறை கோட்ட, மறை மாவட்ட மேய்ப்புப்பணி பேரவைகளை உரியமுறையில் நடைமுறைப்படுத்துமுகமாக ஆயரின் செய்தி

இவ்வாண்டு இரண் டாம் வத்திக்கான் சங்கம் கூடி திருச்சபையின் மறுமலர்ச் சிக்கு அழைப்பு விடுத்ததன் ஐம்பதாவது யூபிலி ஆண் டாகும். திருச்சபை ஓர் இறை மக்கள் சமூகம் என்ற கருத்தை வலியுறுத்திய இரண்டாம் வத்திக்கான் சங்கம், திருச் சபையின் வாழ்விலும் பணி யிலும் பொதுநிலையினர், குருக்கள், துறவிகள் ஆகிய அனைத்து நிலையினரும் இணைந்து பங்கேற்க வேண் டும் என்ற கருத்தை இடித் துரைத்தது. சங்கத்தின் ஒளி யில் வடிவமைக்கப்பட்ட திருச்சபையின் புதிய சட்டக் கோவை சங்கத்தின் கனவை நனவாக்க பல்வேறு பங்கேற்பு அமைப்புக்களை பரிந்துரை செய்தது. பங்கு, மறைக்கோட்ட மட்டங்களில் மேய்ப்புப்பணிப் பேரவைகள் அமைக்கப்பட்டு, மறைமாவட்டத்தில் மேய்ப்புப் பணி விடயங்கள் ஒருங் கிணைக்கப்படும் போது, சிறந்த பலன்களை நாம் பெற முடியும்.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

## யேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் வெள்ளிவிழா

புலம்பெயர்ந்து யேர்மன் நாட்டில் வதியும் தமிழ் கத்தோலிக்க மக்களை இறையன்பில் வழிநடத்திச் செல்லும் யேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் தனது வெள்ளி விழாவினை இவ்வருடம் கொண்டாடுகின்றது. ஆண்டுதோறும் அனைத்து யேர்மன் வாழ் தமிழ் கத்தோலிக்க மக்கள் கேவலார் அன்னையின் திருத்தலத்தில் ஒன்றுகூடி மருதமடு அன்னைக்கு விழா எடுத்து தம் தாய்நாட்டின் அமைதிக்காக செபிப்பர். வெள்ளிவிழா ஆண்டிலே இம்மாதம் 12ம் திகதி கேவலார் அன்னையின் திருத்தலத்தில் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையின் தலைமையில் வெள்ளிவிழா சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இவ்வெள்ளிவிழா திருப்பலியை ஆன்மீக இயக்குனர் அருட்பணி.அ.பெ.பெனற் ஒழுங்குபடுத்தினார்.

# ஏமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

## சிறையிலிருந்தேன்......

எம் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் ஒவ்வொரு மாதமும் ஒரு சிறப்பான கருத்தை நினைவுகூர்ந்து தினமும் செபிப்பார். இம்மாதம் சிறைச்சாலைகளில் வாடும் கைதிகள் நீதியுடன் நடாத்தப்பட வேண்டும், அவர்களின் மனித மாண்பு மதிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை மையப்படுத்தி தினமும் செபித்து வருகிறார். மேலும் சிறையிலுள்ளோர் தவறுகளை உணர்ந்து மனமாற்றம் பெற்று தம் குடும்பத்துடனும் சமூகத்துடனும் இணைந்து நற்பண்புள்ள, இறைநம்பிக்கையுள்ள புது மனிதர்களாக வாழவேண்டும் எனவும் செபித்து வருகின்றார்.

திருத்தந்தை அவர்கள் சென்ற வருடம் உரோமாபுரியிலுள்ள சிறைக்கு சென்று சிறைக்கைதிகளை சந்தித்து உரையாடியபோது அவர் அவர்களிடம் "நான் உங்களை என் இதயத்தில் சுமக்கின்றேன்" எனக் கூறி தம் அன்பையும், தோழமையையும், ஆசீரையும் தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் என்பது சட்டங்களை மீறி குற்றம் செய்பவர்கள் சமூகத்திலிருந்து குழப்பங்களை ஏற்படுத்தாமல் அவர்களை சமூகத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தனிமைப்படுத்தி, அவர்கள் தம் தவறுகளை உணர்ந்து மனம்மாறி நல்ல மனிதர்களாக உருவாக அமைக்கப்பட்ட இடங்கள்.

ஆனால் இன்று சிறைச்சாலைகள் அப்படியல்ல. குற்றங்கள் செய்யாதவர்கள் பலர் சந்தேகத்தின் பெயரில் பல ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். நீதியான விசாரணைகள் இன்றி பல ஆண்டுகளாக வழக்குகள் இழுத்தடிக்கப்பட்டு பலர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். உண்மைக்காகவும் நீதிக்காகவும் குரல் கொடுத்தவர்களும் அநீதியான முறையில் குற்றம் சுமத்தப்பட்டு சிறையிடப்பட்டு இருக்கிறார்கள். அரசியல் பழிவாங்கல்களுக்காக பொய்க் குற்றம் சுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப்படுள்ளார்கள். தனிப்பட்ட குரோதங்களுக்காக குற்றம் சுமத்தப்பட்டும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் சிறைச்சாலைகள் குற்றவாழிகளை நற்பண்புள்ள, நல்ல பழக்கவழக்கமுள்ள மனிதர்களாக உருவாக்குவதற்கு பதிலாக அவர்களை தீய பழக்கவழக்கங்களுக்கு அடிமையாக்கி அவர்களின் நிகழ்கால, எதிர்கால வாழ்வை தொலைத்து விடுகின்றது. விசாரணை என்ற பெயரில் கொடூரமான முறையில் துன்புறுத்தப் படுகின்றார்கள். இதனால் பலர் மரணித்திருக்கிறார்கள். தம் குடும்பங்களை அன்புப் பிள்ளைகளை சந்தித்து பேசி உறவாட அனுமதி மறுக்கப்பட்டு வாழ்வின் விரக்தியிலும் மன வேதனையிலும் தினமும் ஏக்க விழிகளுடன் வாடுகின்றார்கள்.

இவ்வாறு சிறையில் வாடும் இளைஞர் யுவதிகள் அனுபவிக்கும் துன்பங்கள், வேதனைகள் பொதுமக்களின் கண் களுக்குத் தெரிவதில்லை, அவை மறைக்கப்படுகின்றன. சிறைக் கைதிகள் தம் சார்பாக குரல் கொடுக்க முடியாதவர் களாக இருக்கின்றனர்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நாம் எம்மையும் எம்மை சார்ந்தவை பற்றியுமே அதிகம் சிந்திக்கின்றோம். அவற்றிற்காகவே இறைவனை நோக்கி செபிக்கின்றோம். எம் சுயநலங்களை, குறுகிய மனப்பான்மைகளை மறந்து பரந்துபட்ட மனமுள்ளவர்களாக பிறருடைய வாழ்விலும் கருசனை காட்டுகின்றவர்களாக, அவர்களுக்காகவும் இறைவனிடம் செபிப்போம். குறிப்பாக இன்று சிறையில் துன்பங்களையும், வேதனைகளையும் அனுபவிக்கும் இளைஞர் யுவதியர் மனித மாண்புடன் நடாத்தப்பட வேண்டும் என்றும் அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றும் அவர்கள் விடுதலை பெற்று தம் குடும்பத்தினருடன் இணைந்து மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்றும் எம் திருத்தந்தையோடு சேர்ந்து தனியாகவும், சிறிய குழுமமாகவும் பங்குத்திருச்சபையாகவும் தினமும் செபிப்போம்.

***"சிறையிலிருந்தேன் என்னைத் தேடி வந்தீர்களா?"*** (மத். 25:36)

**அருட்பணி. இ. பெற்றுஸ் தயாபரன்**
ஆசிரியர், "பாதுகாவலன்" கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.
Email : editorkavalan@gmail.com

## – அறிந்துகொள்ளுவோம் –

### புனித மாக்சிமில்லியன் கோல்பே




இவர் போலந்து நாட்டினர் 1894ம் ஆண்டு பிறந்தார். 1910ஆம் ஆண்டு பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்து குருவானார். இவரது காலத்தில் ஜெர்மனியின் அரக்கன் ஹிட்லர் தமது நாசிச, நாஸ்திகக் கொள்கைப்படி, பல தீங்குகளை இழைத்து வந்தான். இலட்சக் கணக்கான யூதர்களைத் தீக்கிரையாக்கினான். கிறிஸ்தவர்களையும் விட்டுவைக்கவில்லை. மாக்சிமில்லியனுக்கு 47 வயது நடக்கும் போது இவரும் ஆயிரக் கணக்கானவர்களும் சிறைப் பட்டதுமின்றி கொடிய சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

ஒரு முறை ஆஸ்விட்ஸ் என்ற நகரில் சிறைப்படுத்தப்பட்டவர்களில் இளைஞரான குடும்பத் தலைவர் ஒருவர் சாவுத் தண்டனைக் குத் தீர்ப்பிடப்பட்டார். இளைஞரோ "என் குடும்பம் என்னாவது?" என்று கூறி அழுதார். புனிதர் இதைக் கண்டு, "உனக்குப் பதில் நான் சாகத் தயார்" என்று கூறி அச்சத்தை நீக்கினார். அவருக்குக் கார்பாலிக் ஆசிட் என்ற நச்சு ஊசி ஏற்றப்பட்டது. உயிர் துறந்தார். இவ்வாறு மாக்சிமில்லியன் கோல்பே மற்றவருக்காக உயிரைக் கொடுத்தார்.

புனிதருக்குப் 10 வயது நடக்கும்போது கன்னிமரி இவருக்குக் காட்சி கொடுத்திருக்கிறார். கற்பின் அடையாளமாக வெள்ளை மணிமுடி ஒன்றும் மறைசாட்சியின் அடையாளமாக சிவப்பு மணிமுடி ஒன்றும் இவருக்கு அன்னை காண்பித்தார். இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ளச் சொன்னார். புனிதர் இரண்டையும் எடுத்துக் கொண்டார். புன்முறுவலுடன் மரியன்னை மறைந்துவிட்டார்.

இவர் தம் 16ஆவது வயதில் பிரான்சிஸ்கன் துறவற சபையில் சேர்ந்தார். அங்கே என்புருக்கி நோய் இவரைத் தாக்கியது. அப்போது அவர் உரோமையில் குருத்துவத்திற்குப் படித்துக்கொண்டிருந்தார். "தீமையை விட நன்மை எளிதில் பரவும் தன்மையுடையது" என்ற அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். அன்னை மாமரியிடம் பிள்ளைக்குரிய அன்பைக் காட்டினார். "அவர் நம்மை முழுமையாக நடத்துவதற்க நம்மையே கையளிக்க வேண்டும். அவரின் கைகளில் நம்மை ஒப்படைக்கும் போது, நமக்கு எல்லாம் அமைதியும் நிறைவுமாக இருக்கும். அப்போது அவர் நம்மைப் பாதுகாக்கிறார். அள்ளித் தருகிறார், உள்ள, உடல் தேவைகளை நிறைவுசெய்கிறார். நம் இன்னல்களை நீக்கிவிடுகிறார்" என்பார். நாம் மரியன்னையிடம் கொண்டிருக்க வேண்டிய உறவை இவ்வாறு கற்றுக் கொடுக்கிறார். புனித மாக்சிமில்லியன் கோல்பேயின் திருவிழா ஆவணி மாதம் 14ம் திகதி கொண்டாடப்படுகிறது.

## பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் முதல் நன்மைத் திருப்பலி

வல்லமை நிறைந்தவரும், வாழ்வின் ஊற்றானவருமான நற்கருணை ஆண்டவரை தமது ஆன்மீக உணவாக 04-08-2012 அன்று முதல்முதலில் முதல்நன்மை எனும் அருட்சாதனம் மூலம் பாஷையூர் புனித அந்தோனியார் பதியின் 58 சிறார்கள் பெற்றுக் கொண்டனர்.



அர்ப்பணிப்புள்ள மறை ஆசிரியர்களின் மூன்று மாதகால நிறைவான ஆயத்தத்தின் பின்னர் இச்சிறார்கள் இவ் அருட்சாதனத்தை வரமாக வாங்கிக் கொண்டனர். இவர்களுக்கான பாசறைப் பயிற்சியானது நவாலி தேவர்கட்டு, புனித திரு இருதய ஆண்டவர் ஆலயத்தில் இடம்பெற்றது.

ஆசையாய் ஆடு வளர்ப்பது ஒருநாள் அறுப்பதற்காகத்தான் எனச் சொல்லி இயேசு தன்னையே விருந்தாகக் கொடுத்த தற்கொடையாளி என அற்புதமான மறை உரை ஆற்றினார் அருட்தந்தை மரியதாஸ் IVD. அருட்தந்தையர்கள் றோய் பேடினன்ட், றெனாட் செறில்னஸ் ஆகியோர் கூட்டுத் திருப்பலி நிறைவேற்றினர்.

## 13வது உலக ஆயர்கள் மாமன்றத்தலைவர் பிரதிநிதிகள் நியமனம்

ஒக்டோபர் 7 முதல் 28ஆம் திகதி வரை வத்திக்கானில் கிறிஸ்தவ விசுவாசத்தை பரப்புவதற்கான புதிய நற்செய்திப்பணி என்ற தலைப்பில் நடைபெறவிரக்கும் 13வது உலக ஆயர்கள் மாமன்றத்தின் தலைவர் பிரதி நிதிகளாக ஹாங்காங் ஆயர் கர்தினால் ஜான்டாங்ஹான், மெக்சிகொவின் குவாதலாஜ்ரா பேராயர் கர்தினால் பிரான்சிஸ்கோரோபிளஸ், காங்கோ குடியரசின் கின்ஷாசா பேராயர் கர்தினால் லாவுரன்ட்பாசினியா ஆகியோரை நியமித்துள் ளார் திருத்தந்தை. இந்த உலக ஆயர்கள் மாமன்றத்தில் உலகெங்கிலுமிருந்து சுமார் 300 ஆயர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# திருக்குடும்ப சபையின் 150 ஆவது ஆண்டு நிறைவில் மனந்திறந்து...

1862 இல் யாழ் மண்ணில் திருக்குடும்ப சபைச்சகோதரிகள் தம் தடம் பதித்த 150ஆவது, ஆண்டை நன்றி நிறை இதயங்களுடன் நினைவுகூரும், யாழ் மாகாண திருக்குடும்ப சகோதரிகள் இவ்வாரம் முதல் தம் சபைபற்றியும், அதன் வளர்ச்சி பற்றியும் பாதுகாவலன் வழியாக வாசக நெஞ்சங்களுக்கு சொல்ல வருகின்றார்கள்.

- ஆசிரியர் -

எம் ஈழமண்ணில் கிறிஸ்தவம் மலர்ந்து பல ஆண்டுகள் கடந்து விட்டன. இம்மண்ணில் கிறிஸ்துவை அறிவித்த பெருமை ஐரோப்பிய நாட்டிலிருந்து நற்செய்திப்பணிக்காக இங்கு வருகை தந்த ஐரோப்பிய குருக்கள் துறவிகளையே சாரும். இவர்கள் அனைவரும் நற்செய்தித் தூதுவர்களாக, பல்வேறு துறவற சபைகளிலிருந்து இந்நாட்டுக்கு அனுப்பப்பட்டனர். "நற்செய்தி அறிவிப்போரின் மலரடிகள் எவ்வளவு பேறுபெற்றவை" *(எசா: 52:7)* என்பதற்கமைய அனுப்பப்பட்ட இத்துறவிகள் மறை பரப்புப் பணியை ஆர்வத்துடன் ஆற்றினர்.

இவ்வாறு மறை பரப்ப இங்கு வந்தவர்களில் சிறப்பாக பெண் துறவற சபைகளில் "திருக்குடும்ப சபையே" முதற் துறவறசபை ஆகும். இவர்கள் 1862 ஆம் ஆண்டு தொடங்கி 1985 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாண வடமாநிலத்திலும், பின் இலங்கையின் பல்வேறு இடங்களுக்கும் பரவி, தம் வாழ்வின் பிரசன்னத்தாலும், அனபுப் பணிகளாலும், பலரின் மனங்களைக் கவர்ந்து, கடவுள்பால் அவர்களை அழைத்துச் சென்றனர். பிறமறைகளிலிருந்த பலர் இவர்களால் கவரப்பட்டு, கத்தோலிக்க திருச்சபையில் இணைந்தனர் என்பதற்கு வரலாற்று ஆதாரங்கள் சான்று பகர்கின்றன. இத்துறவிகள் நற்செய்தியை மனித மனங்களில் பதிய வைக்க தம் வாழ்வில் தூய மனம், கறைபடாத வாழ்வு, இறை ஒன்றிப்பு, எளிமை, மகிழ்வு என்பவற்றை அணிகலன்களாக அணிந்து, சபை பற்றுடனும், "இறைவன் மாத்திரமே" என்ற சபையின் மனப்போக்குடனும் அனைத்துப் பணிகளையும் அன்புள்ளத்துடன் ஆற்றினர்.

யாழ் மண்ணில் உருவெடுத்த திருக்குடும்ப சபை யாழ் அப்போஸ்தலிக்க பிரதிநிதிகளாகிய ஆயர்களின் நிர்வாக இணைப்புக்குட்பட்ட, குருநாகலுக்கும் விரிந்து சென்றது. குருநாகலை தலைமையகமாகக் கொண்டு தென்பகுதி கத்தோலிக்க மக்கள் வாழும் மறைமாவட்டங்களாகிய வென்னப்புவா, சிலாபம் போன்ற பகுதிகளிலும், ஏனைய இடங்களிலும் சபை விரிவடைந்து வளர்ச்சி பெற்றுள்ளது. இத்துறவிகளின் வாழ்வால் கவரப்பட்ட பல இளம் பெண்கள், தம் வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணித்தார்கள்.

இத்துறவிகள் யாழ் மண்ணிற்கு வருகை தந்த 150 ஆவது முப்பொன் விழாவை 2012 ஆம் ஆண் டில் நினைவுகூரும் யாழ் மாகாண திருக்குடும்ப சபைத்துறவிகள் தம் சபை வரலாற்றையும், அதனுள் அடங்கியுள்ள ஐந்து விதமான அழைப்புகளையும் வாசகர்களாகிய உங்களுக்கு இரத்தினச் சுருக்கமாகச் சொல்ல வருகின்றனர்.



பிரான்சியப் புரட்சி உலகையே அதிரவைத்த காலம் அது. இப்புரட்சியின் தாக்கங்களை அனுபவித்த நேரிலே, கண்ட பிதா பியன்வெனுவுக்கு அப்பயங்கர பரிதாப நிகழ்வுகள், இதயத்தில் பல கதைகள் பேசின. காலத்தின்தேவைகள், அவருடைய இதயத்தை அசைத்து பிரான்சின் மிக நெருக்கடியான, சின்னாபின்னமாக்கப்பட்ட சமூக, சமய அரசியல், பொருளாதார நிலைகளில் ஏற்பட்ட திடீர் மாற்றங்கள் பியன்வெனுவுக்கு " இவ்ங்களுக்கு ஏதாவது செய்" என்ற செய்தி சொன்னது. மனிதம் சிதறடிக்கப்பட்ட பிரான்சில் பணி செய்யவென விரும்பி, புதிய சமுதாயம் ஒன்றைத் தோற்றுவிக்கும் மன உறுதிப்பாட்டுடன், 1820 இல் திருக்குடும்ப சபையை நிறுவினார். காலத்தின் அறிகுறிகளைக் கருத்தில் கொண்டு பணி செய்யவென, பல அழைப்புக்களைக் கொண்ட ஒரே அமைப்பாக இச்சபை மலர்ந்தது. பணிவு, ஏழ்மை விரதத்துவம் என்னும் துறவற வார்த்தைப்பாடுகளினால் தம்மை முழுமையாக அர்ப்பணித்து, குழுவாழ்க்கை வாழும் துறவறப் பெண்களைக் கொண்ட ஏழு வேறுபட்ட அழைப்புக்களை ஒரு சபைக்குள் நிறுவினார்.

யுக மாற்றங்கள், இச்சபையின் அமைபபிலும், அசைவு வீச்சிலும் சில மாற்றங்களை 1903ஆம் ஆண்டு ஏற்படுத்தியது. ஏழு அழைப்புக்கள் மூன்று அழைப்புக்களாக குறைக்கப்பட்டன. மனித வாழ்வும், மனிதன் எண்ணுகின்ற, சிந்திக்கின்ற முறைகளும் எப்பொழுதும் ஒரே மாதிரி அமைவதில்லை. மனித சிந்தனைகள் மாறும் போது அது உலகில் சமுதாயங்களில், நாடுகளில் தோற்றுவிக்கும் தாக்கங்களும் யுகங்களுக்கொரு முறை ஏன்? ஒவ்வொரு நாளுமே நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது.

நாம் விரும்பியோ விரும்பாமலோ இவ் அசைவுக்குள் உட்படுத்தப் படுகின்றோம். 1957 ஆம் ஆண்டிலும், திருக்குடும்ப சபையின் ஆட்சியமைப்பு பரவலாக்கப்பட்டபோது பிறிதொரு மாற்றம் நிகழ்ந்தது. தற்போது துறவறப் பெண்கள் அப்போஸ்தலிக்க தியானயோக குழுமங்களாக வாழ்கின்றனர். அர்ப்பணிக்கப்பட்ட திருமட சார்பற்றோர் உலகில் புளிக்காரம் போன்று மறைந்த வாழ்வு வாழ்கின்றனர். நிறுவுனர் காலத்தைப் போன்று ஆண்கள் பெண்களைக் கொண்ட !பொது நிலையினரையும், அருட்பணியாளர்களையும், திருக்குடும்ப இளைஞர்கள், சிறார்களை உள்ளடக்கியதாகவும் இச்சபையானது இன்றைய உலகில் காணப்படுகின்றது.

வாசக நெஞ்சங்களே! மேற்கூறப்பட்ட அங்கத்தவர்கள் தம் வாழ்வின் கதைகளை, அனுபவங்களை, சபையைப் பற்றிய செய்திகளை பாதுகாவலனில் சிறப்புக் கட்டுரைகளாக எழுதி, உங்களுடன் பகிர விரும்புகின்றனர். யாழ் மாகாணத்திலுள்ள, "திருக்குடும்ப மென்ற பாரிய விருட்சத்திலிருந்து" வாழ்வு பெற்றவர்களுக்கும், உங்களுக்கும் இச்சபைபற்றிய மீள்பார்வைக்கும், புதியனவற்றை அறிவதற்கும் இது ஒரு வழிகாட்டியாகவும் தங்கள் அன்பையும், மதிப்பையும் மகிழ்ச்சியையும் இவர்கள்பால் தூண்டிவிடும் ஓர் தூண்டியாகவும், இவர்களுடைய அர்ப்பணத்தின் பொருளையும் பொறுப்பையும் புரிந்து கொள்ள சிந்தனைக்கு கிடைக்கும் தெளிவாகவும், ஆண்களும் பெண்களும், இச்சபையின் ஏதோவொரு நிலையினரின் வாழ்வுக்குள் தங்களையும் அர்ப்பணிக்க அவர்களின் உள்ளத்தை தொட்டு மென்மையாகப் பேசும் கடவுளின் குரலொலியாகவும் இவ் எழுத்தாக்கங்கள் அமையட்டும்.

தகவல்
யூபிலிவிழா அமைப்பாளர்,
யாழ்-மாகாண இல்லம்,
யாழ்ப்பாணம்.

(தொடரும்)———

மீண்டும் புதிதாய்...

## இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் 50 ஆண்டுகள் நிறைவையொட்டிய கட்டுரைத் தொடர்

அருட்பணி. ம.வி.இ. இரவிச்சந்திரன்

# சவால் விடுக்கும் சங்கம்

இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபையின் வரலாற்றில் 21வது பொதுச்சங்கம்.

இதற்கு முன்சென்ற இருபது சங்கங்களுக்கும் இல்லாத தனித்துவமும் சிறப்பும் முக்கியத்துவமும் இச்சங்கத்திற்கு உண்டு.

கிறிஸ்துவின் வருகை காரணமாக வரலாறே கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப் பின் எனக் கூறிடப்பட்டது போல இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூட்டப்பட்டதன் பின் கத்தோலிக்க திருச்சபையின் வழிபாடு, இறையியல், அமைப்பு, பணிகள் அனைத்துமே சங்கத்திற்கு முன், சங்கத்திற்கு பின் எனப் பேசப்படும் அளவுக்கு இச்சங்கம் முக்கியத்துவம் பெறுகிறது.

இவ்வாண்டு இச்சங்கம் கூட்டப்பட்டதன் ஐம்பதாவது நிறைவு ஆண்டாகும். இந்த ஐம்பது ஆண்டுகளிலே கத்தோலிக்க திருச்சபையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன; ஏற்பட்டு வருகின்றன. இச்சங்கம் திருச்சபையின் கட்டுக்கோப்பையும் ஒழுங்கையும் சிதைந்து விட்டது என்ற பழமை பேணிகளின் கூக்குரல் ஒருபுறம் கேட்க மறுபுறம் சங்கத்தின் நோக்கமும் அது விடுக்கும் சவால்களும் ஐம்பதாண்டுகளாகியும் ஆரம்பக் கட்டத்திலேயே இருக்கின்றன என்ற ஆதங்கம் முற்போக்கு வாதிகளிடம் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் சமகால கத்தோலிக்க மக்களுக்காக சங்கத்தையும் அதன் நோக்கங்களையும், கற்பித்தல்களையும் மீள அறிமுகம் செய்வது பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என்ற நோக்கிலே இந்தக் கட்டுரைத் தொடர் ஆரம்பமாகிறது.

சவால் விடுத்த இச்சங்கத்தை மீள ஒருமுறை சந்திக்கு அழைத்து வருவதே எமது நோக்கம்.

சங்த்த்தின் பிதாமகர் திருத்தந்தை 23ம் யோவான் 1958இலே திருத்தந்தையாகத் தெரிவு செய்யப்பட்டபோது "தன்னுடைய பணி ஒரு ஆயனின் மிகப் பணிவான ஊழியம்" என்ற தாழ்ச்சிமிகு வார்த்தைகளோடு தன்னை அறிமுகம் செய்தார்.

யாரும் எதிர்பாராதவிதமாக 1959 ஜனவரி 25இல் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தை கூட்டப் போவதாக அறிவித்தார்.

1961 டிசெம்பர் 25 இல் உத்தியோக பூர்வமாக 21வது பொதுச் சங்கத்திற்கான அழைப்பை விடுத்தார்.

1962 ஒக்டோபர் 11 இல் இச்சங்கத்தைத் தொடக்கி வைத்து மூன்றாம் மிலேனியத்துக்காக திருச்சபையை தயார் செய்யும் அற்புத செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தார்.

வாக்களிக்கப்பட்ட தேசத்துக்கு மக்களை அழைத்துச் சென்ற மோசே அம்மண்ணில் கால்பதிக் காமலே இறைவனடி சேர்ந்தது போல் இவரும் தான் கூட்டிய சங்கத்தின் நிறைவைக் காணாமல் அதனுடைய இரண்டாவது அமர்விலே 1963 இல் இறைபதமடைந்தார்.

இவருக்குப் பின் திருத்தந்தை யான 6ம் பவுல் தனது முன்னோடியின் வழியில் கடினமான அந்தப்பணியை தொடர்ந்து முன்னெடுத்து 1965 இல் சங்கத்தை நிறைவுக்குக் கொண்டு வந்தார்.

சவால் நிறைந்த சங்கத்தைத் தொடக்கி வைத்த சாதனையாளர் 23ம் யோவான் என்றால் சங்கம் ஏற்படுத் திய புதுப்பித்தல் புயலை சந்தித்த வீரர் 6ம் பவுல் ஆவார்.

காலத்துக்குரிய திருச்சபையாக கத்தோலிக்க திருச்சபையை வடிவமைக்க வாய்ப்பை ஏற்படுத்திய இவ்விரு திருத்தந்தையர்களுக்கும் கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல முழு உலகமுமே என்றும் நன்றிக் கடன் பட்டிருக்கின்றது.

இன்னும் புதிதாய் மலரும்

# விண்ணில் பூத்த மண் மலர்

"வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது: பெண் ஒருவர் காணப்பட்டார்; அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார்; நிலா அவரது காலடியில் இருந்தது. அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார்." - *திவெ 12:1*

"மரியா, தம் இவ்வுலக வாழ்க்கைப் பயணம் நிறைவுற்றதும், உடலுடனும் ஆன்மாவுடனும் விண்ணக மாட்சிக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றார்." இந்த உண்மை எல்லாக் கத்தோலிக்க மக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு கிறிஸ்தவ கோட்பாடு என 1950ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் திருத்தந்தை 12ஆம் பியுஸ் அறிக்கையிட்டார்.

மரியாவின் விண்ணேற்பு பற்றிய இந்த நம்பிக்கை கி.பி. 5ஆம் நூற்றாண்டிலிருந்தே கிறிஸ்தவ மரபில் தொடர்ந்து வளர்ந்துள்ளது.

விண்ணேற்பு என்பது எங்கோ வானின் உயரத்தில் உள்ள இன்னொரு உலகிற்கு மரியா சென்று, அங்கு மண்ணக அரசிகளின் தோரணையில் மணிமுடியும் ஒளிரும் பட்டாடையும் அணிந்து, தங்க அரியணையில் அமர்ந்து கோலோச்சும் நிலைக்கு உயர்த்தப்பட்ட நிகழ்வு என்றே மக்கள் பொதுவாகக் கற்பனை செய்து கொள்கின்றனர்.

ஆனால் திருவெளிபாட்டு நூலின் மேற்கூறிய வருணனை உருவக மொழியே. அது மண்ணக மொழியிலும் மனிதப் பாணியிலும் தெய்வீக அர்த்தங்களையும் அழகுகளையும் சொல்லும் முயற்சியே. எனவே அதை நாம் வார்த்தைக்கு வார்த்தை நேர்பொருள் காணுதல் முறையன்று.

மேலும் முதலிலும் நேரடியாகவும் அப்பகுதி துன்புறுத்தப்பட்ட திரு அவை அடையவிருக்கும் மாட்சிமையையே இறைவாக்காக எடுத்துரைக்கிறது. அந்தத் திரு அவையின் முதன்மை உறுப்பினர் எனும் வகையில் தான் அது மரியாவின் விண்ணேற்பைக் குறிக்கிறதே அன்றி நேரடியாகவும் வெளிப்படையாகவும் அல்ல.

விண்ணேற்பு என்பது இறைவன் மரியாவுக்கு ஆற்றிய அரும்பெரும் செயல்களுள் இறுதியானது. *"நான் ஆண்டவரின் அடிமை"* எனத் தம்மையே முழுமையாகவும் இறுதிவரையிலும் இறைத் திருவுளத்திற்கு அர்ப்பணித்த மரியாவை அவர் நிறைவாக மகிமைப்படுத்திய செயலே அது.

அதாவது, விண்ணேற்பு என்பது தம் மகன் இயேசுவின் பணிகளிலும் பாடுகளிலும் முழுமையாகப் பங்கேற்ற மரியா அவரது உயிர்ப்பு விண்ணேற்றம் என்பவற்றிலும் முழுமையாகப் பங்கேற்ற நிறைமகிமை நிகழ்வுதான்.

ஆம், தம் உயிர்ப்பு - விண்ணேற்றத்தின் வழியாக இயேசு நம்மைவிட்டு விலகிச் சென்றுவிடவில்லை. தந்தையின் வலப்புறம் வீற்றிருந்து மாட்சியோடு ஆட்சிசெய்யும் அவர் நம்முடனும் இருந்து உயிர்தரும் ஆற்றலாக, வாழ்விக்கும், வளர்விக்கும் வல்லமையாகச் செயல்படுகிறார் *(1கொரி 15:45; மாற் 16:19-20).*

அதுபோலவே மரியாவும் தம் விண்ணேற்பின்வழி நம்மைவிட்டு விலகி வேறு உலகம் சென்றுவிடவில்லை. மாறாக, நிறைவு நோக்கி நம்மை நடத்தும் வழித்துணையாகி வல்லமையுடன் செயல்படுகிறார். இதுவே அரவது நிறைவு நிலை அல்லது மாட்சிமை.

ஆம், உண்மையான மகிமை அல்லது உயர்ந்தோரின் மாட்சிமை என்பது 'மணிமுடியும் மங்கள ஆடைகளும் அணிந்து, ஆடம்பரங்களும் அலங்காரங்களும் சூழ, பிறரது பாராட்டுகளையும் துதிகளையும் பெறுவது அல்ல. சின்ன மனிதர்களே இத்தகைய பகட்டுகளை மாட்சிமை எனக் கருதி எதிர்பார்ப்பர். சான்றோர்கள் மாட்சிமை எனக் கருதி வரவேற்பதோ பிறரை வாழவும் வளரவும் வைக்கும் வாய்ப்பையும் செயல்பாட்டையும் தாம்.

இயேசுவின் மகிமை அவரது சிலுவைதான். ஏனெனில் அதில்தான் அவர் தம் உயிரை ஈந்து உலகிற்கே மீட்பு அளித்தார். மரியாவின் விண்ணேற்பின் மாட்சியும் அத்தகையதே. இன்றும் நம்முடன் இருந்து, இயேசுவின் வழியில் நாமும் வாழ்வடைய அவர் நம்மைத் தொடர்ந்து தூண்டுகிறார்.

அன்பு, உண்மை, நீதி, தியாகம், பரிவிரக்கம் எனும் இயேசுவின் இறையாட்சிப் பண்புகளின் மாதிரியாக விளங்கி, அப்பண்புகளில் நாமும் வளர்ந்திட அருளாற்றல் மிக்க முறையில் மரியா செயல்படுகிறார். இதுவே அவரது உண்மையான மகிமையும் மாட்சியும்.

மரியாவின் பண்புகளையும் பணிகளையும் தமதாக்கி, பிறரை சிறப்பாக நலிந்தோரை வாழவைத்து, இந்த நானிலத்தையே இறையாட்சியாக வளர்த்தெடுக்க நம்மை நாம் ஈடுபடுத்துவதுதான் மரியாவுக்கு நாம் செய்யும் மிகப்பெரும் சிறப்பும் பெருமையும்.

அப்பண்புகளில் நாம் நாளும் வளர்ந்து அத்தகைய பணியை நாமும் முழு அர்ப்பண உணர்வோடு ஆற்றி, மரியா பெற்ற மகிமையில் பங்குபெற அழைக்கப்படுகிறோம். அத்தகைய சீடத்துவ வாழ்வைக் கடைப்பிடிப்போர் இயேசுவின் மாட்சிமையில் நிச்சயம் பங்குபெறுவ[ர்] ... ஒரு முன்னுறுதிப்பாடாக விளங்குகிறது.

நன்றி: அவர் அவர் மரியா
அருட்பணி. தே. அல்போன்சு

# அம்மாவுக்கு ஆசையாய் ஓர் கடிதம்

சி. அஜந்தன் – புனித சவேரியார் குருமடம்

என்
பாசம் நிறைந்த
அம்மா!

ரோசா
வாசம் வீசும்
விண்ணில்
நீ நலமா?

இன்றும்
எண்ணி எண்ணிப்
பார்க்கிறேன்
இழுந்தென்றலாய்
இதயம்
வருடிப் போகும்
இனிய – உன்
அன்பை

அன்று
அண்ணன்
இயேசுவின்
கொலைக்களத்தில்
தானே – தாயே
என்னை
நீ
பிரசவித்துக்
கொண்டாய்

ஒற்றை நிமிடத்தில்
இரட்டை
வலி தாங்க
எப்படி முடிந்தது
உன்னால்?

மல்லிகை
மணம்கொண்ட
அம்மா
அமல மழை
உன்
உயிர் மேல்
ஊற்றியும்
உருகாமல் – நீ
உயிர் வாழ்ந்த
உத்தியை
உரைப்பாயா
உன் மகன்
எனக்கு?

அம்மா
செபமாலை சொல்ல
எனக்கு
நேரமே இல்லை
கண்ணீர்
வழித்து ஒழுகும்
தொலைக் காட்சித்
தொடர்களில்
தொலைந்து போனது
தொன்மை மிக்க
எம்
குடும்பத்தின்
ஆன்மீகம்
வெட்டி எறிந்த
தலைமயிர் போல
வேண்டாப்பொருளாய்
ஆகிறதம்மா
நீ
தந்து விட்டுப் போன
செபமாலை

தீப்பிடித்த
காட்டை விட்டு
பறந்தோடும்
குருவிகள் போல
காணாமல் போனது
எம்
ஆனந்தமும்
அமைதியும்
விண்ணகத்துக்கு
ஏறிப்போன அம்மா
என்
உயிர் வலி
உனக்குத் தெரியுமே

தொலைந்து போகும்
மனிதத்தை
அலைந்து திரிந்து
தேடிப்பிடிக்க
வாழ்வின்
அர்த்தம் உணர
ஆசி கூறம்மா

மறக்காமல்
பதில் போடு தாயே
உன்னை
நினைக்காமல்
நான்
இருப்பதில்லை
ஒரு நாளும்
இப்படிக்கு
பாசமுடன்
உன்
பிரிய மகன்

# குடும்பங்களுக்கான தியானம்

**தேசிய குடும்பநல பணியகத்தால் இவ்வருடம் புரட்டாதி மாதம் 21, 22, 23 ஆகிய தினங்களில் தலவில்லு புனித அன்னம்மாள் ஆலயத்தில் குடும்பங்களுக்கான வருடாந்த தியானம் நடைபெற இருக்கின்றது. இத்தியானத்தில் கலந்துகொண்டு உங்கள் குடும்பங்கள் பயனடைய அழைக்கின்றோம். கலந்துகொள்ள விரும்பும் குடும்பங்கள் உங்கள் பங்குத்தந்தையுடனோ அல்லது அகவொளி குடும்பவளத்துணை நிலையத்துடனோ தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு ஆவணி மாதம் 31ம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.**

நன்றி

அகவொளி – குடும்பவளத்துணை நிலையம்
சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## மடுத்திருப்பதியின்.... (1ம் பக்கத் தொடர்ச்சி)

15ஆம் திகதி இடம்பெற்ற திருவிழாத் திருப்பலியானது இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தின் நேத்ரா தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. அத்துடன் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை தென்றல் அலைவரிசையிலும் சிங்கள சேவையிலும் நேரடியாக அஞ்சல் செய்யப்பட்டது. பாடசாலை விடுமுறைக் காலமாக இருந்ததால் பெருமளவிலான யாத்திரிகர்கள் இத்திருவிழாவுக்கு வருகை தந்திருந்தனர்.

இவ்வாண்டு மடுததிருப்பதியின் ஆவணித் திருவிழாவுக்கான அனைத்து பூர்வாங்க ஏற்பாடுகளையும் மடுப்பரிபாலகர் அருட்திரு. எமிலியானுஸ்பிள்ளை அவர்கள் மேற்கொண்டிருந்தார். மன்னார் மாவட்டச் செயலகத்தின் முழுமையான ஒத்துழைப்போடு மன்னார் மறைமாவட் குருமுதல்வா அருட்திரு. விக்ரர் சோசை, மன்னார் மறைமாவட்டக் குருக்கள் மற்றும் ஏனைய மறைமாவட்டக் குருக்களின் அனுசரணையில் திருவிழா ஆயத்தங்கள் இடம்பெற்றன.

மருதமடுத் திருத்தலம் ஒரு வியாபாரஸ்தலமோ அல்லது சுற்றுலாப் பகுதியோ அல்ல. பல நூற்றாண்டுகளாக ஆன்மீக மனமாற்றமும், அமைதியும் அருளும் புனிதமான திருத்தலமாகும். எனவே இத்திருத்தலத்திற்கு யாத்திரிகர்களாக வருவோர் இத்தலததின் புனிதத்தன்மைக்கு ஏற்ப நடந்துகொள்வேண்டும் என அறிவுறுத்தப்பட்டனர்.

## விண்ணக வாழ்வில்... ஏழு ஆண்டுகள்



அமரர்.
பாலச்சந்திரன் அனிஸ்ரன்
குவைரோ

"சீவியத்தில் நேசித்தவர்களே!
மரணத்திலும் மறவாதீர்கள்"

மலர்வு 1957-10-24 | உதிர்வு 2005-08-10

அப்பா என்றழைத்த எம் தெய்வமே
ஆண்டு ஏழு ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயரம்
உங்கள் பொன் மொழியும் புன்சிரிப்பும்
கண்முன் நிழலாட கதிகலங்கி
நிற்கின்றோம் நாம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

முகவரி
489/10 புனிற்
தருமபுரம்.

மனைவி, பிள்ளைகள்
மருமகன்,
பேரப்பிள்ளை.

Add-79/12

## நீங்காத நினைவில் 15ம் நாள் நினைவஞ்சலி



திருமதி அன்னம்மா
செல்வம் வேதநாயகம்
(இளைப்பாறிய ஆசிரியர் : புனித மரியாள் கல்லூரி திருகோணமலை புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்)

மண்ணில் 26 - 07 - 1931
விண்ணில் 08 - 08 - 2012

"சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்திலும் மறவோம்"
ஆண்டவனில் உங்கள் ஆன்மா
அமைதி பெற பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரிகள்.

பதுளை

Add-80/12

# மேய்ப்புப்பணிப் பேரவைகளுக்கான விதிகள் ஆலய மேய்ப்புப்பணிப் பேரவை

## ஆலய மேய்ப்புப்பணிப் பேரவை

1. அமைப்பின் பெயர்

இது ஆலய மேய்ப்புப்பணிப் பேரவை என அழைக்கப்படும்.

2.0 பேரவையின் இயல்பு

2.1 பங்குத் தந்தையின் தலைமையில் பணித் தகுதியின் அடிப்படையில் உள்ளவர்களும், ஆலய மக்களால் தேர்நதெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், பங்குத் தந்தையின் நியமன உறுப்பினரும் ஒருங்கிணைந்து, அவ்வாலய மக்கள் கிறிஸ்தவ வாழ்வின் அனைத்து துறைகளிலும் செழித்தோங்க திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தும் குழுவே இவ்வாலய மேய்ப்புப்பணிப் பேரவை.

2.2 ஆலய மேய்ப்புப்பணிப் பேரவை திருச்சபைச் சட்டங்களுக்கும்; ஆயரின் அறிவுறுத்தல்களுக்கும் உட்பட்டு, பங்குத் தந்தையருடன் இணைந்து கலந்துரையாடி, ஆலயத்திருச்சபையின் பொதுநலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, சகோதர உறவுடன் தீர்மானங்களை எடுப்பதற்கும் அததீர்மானங்களை நடைமுறைப் படுத்துவதற்குமான ஒரு அமைப்பாகும்.

3.0 நோக்கங்களும் பணிகளும்

3.1 ஆலய மக்களை விசுவாச வாழ்வு, செப வாழ்வு, அன்புறவுடனான பகிர்தல் வாழ்வு, மன்னிதல் வாழ்வு, நீதி, சமாதான வாழ்வு ஆகியவற்றில் கட்டியெழுப்பி, குடும்ப உணர்வோடு வாழ அவர்களைப் பயிற்றுவித்தல்.

3.2 ஆலயத்தில் இயங்கிவரும் பக்திச் சபைகள், அமைப்புகள் ஆகியவற்றின் தனித்துவத்தை மதித்து, அவற்றிடையே நல்லுறவையும் ஒற்றுமையையும் வளர்த்தல்.

3.3 ஆலயத்திருச்சபையில் அன்பியங்களை உருவாக்கி வலுப்படுத்துதல்.

3.4 ஆலயத் திருச்சபையின் அனைத்து முன்னெடுப்புக்களையும் ஒருங்கிணைத்தல்.

3.5 ஆலயத் திருச்சபையின் தேவைகளுக்கு ஏற்ப, நீண்டகால, குறுகிய காலத் திட்டங்களை வகுத்துச செயற்படல்.

3.6 மறைமாவட்ட ஆயர் தரும் ஆலோசனைகளை, முடிவுகளை செயற்படுத்துதல்.

3.7 ஆலயத்தில் நிகழும் விழாக்கள், நிகழ்ச்சிகள் என்பனவற்றை திட்டமிட்டு, மக்களின் ஒத்துழைப்புடன், அவர்களின் வளர்ச்சிக்குப் பயனளிக்கும் விதத்தில், நடத்துதல்.

3.8 ஆலயத்தின் உடனடித் தேவைகள், பிரச்சினைகள் என்பனவற்றிற்குத் தீர்வுகாண பங்குத்தந்தையுடன் இணைந்து செயற்படல்.

3.9 கிறிஸ்துவின் முப்பெரும் பணிகளான புனிதப்படுத்துதல், போதித்தல், வழிநடத்துதல் ஆகியவற்றில் மக்கள் அனைவரும் பங்கு பற்றிச் செயற்பட, கூட்டங்கள், கருத்தரங்குகள், பயிற்சிகள் போன்றவற்றை ஏற்பாடு செய்தல்.

4.0 அங்கத்தவம்

ஆலய மேய்ப்புப்பணிப் பேரவையின் உறுப்பினர்கள் ஆலயத்தின் எல்லா நிலைகளிலும் உள்ள ஆண்களையும் பெண்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பின்வரும் மூன்று அடிப்படைகளில தகுதி பெறுவர்.

4.1 பணித் தகுதி அடிப்படையில்

4.1.1 பங்குத் தந்தை

4.1.2 உதவிப் பங்குத்தந்தை

4.1.3 திருத்தொண்டர்

4.1.4 ஆலயத்தில் பணிபுரியும் முழுநேர மறையாசிரியர்

4.1.5 ஆலயத்திலுள்ள துறவற இல்லங்களின் பிரதிநிதிகள்

4.1.6 பங்குத் தந்தையின் வழிகாட்டலில் இயங்கும் சபைகளின் இரு பிரதிநிதிகள்

4.2 தேர்தல் அடிப்படையில்

4.2.1 பூகோள அடிப்படையிலும், ஆலய மக்களின தொகையைக் கருத்தில் கொண்டும், பிரதிநிதிகள்; வட்டாரம்; அன்பியம்; தொகுதி என்ற ரீதியில் நடாத்தப் படும் தேர்வின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

ஆகக்கூடியது 35குடும்பங்களுக்கு ஒரு பிரதிநிதியாவது தெரிவு செய்யப்பட வேண்டும்.

4.2.2 தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை மேய்ப்புப்பணிப் பேரவையின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாது இருத்தல் வேண்டும்.

4.3 நியமன அடிப்படையில்

4.3.1 ஒரு சில துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களும் தேர்வு அடிப்படையில் போதிய பிரதிநிதித்துவம் பெறாதவர்களின் பிரதிநிதிகளும் பங்குத்தந்தையால உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர் (உ+ம்: பெண்கள், இளைஞர்)

4.3.2 பணித்தகுதியின் அடிப்படையிலும், நியமன அடிபபடையிலும் உறுப்புரிமையை பெறுபவர்களின் கூட்டு எண்ணிக்கை பேரவையின் மொத்த உறுப்பினர் தொகையில் மூன்றில் ஒரு பங்குக்குக் கூடுதலாக இருத்தலாகாது.

5.0 தேர்தல் முறை

5.1 ஞாயிறு அல்லது அனைவருக்கும் வசதியான நாளில வட்டாரம்; அன்பியம்; தொகுதி ரீதியாக தனித்தனியே கூட்டங்கள் நடத்தபட்டு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்.

5.2 ஏகமனதான தேர்வு ஊக்குவிக்கப்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்கள் முன்மொழியப்படும் பட்சத்தில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும்.

5.3 தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லது நியமன உறுப்பினர பதவி இழந்தால் பேரவைத் தலைவர் வெற்றிடத்தை நிரப்ப ஏற்பாடு. செய்வார்.

5.4 ஐம்பது குடும்பங்களுக்கு உட்பட்ட ஓர் ஆலயத்தில் மேய்ப்புப்பணிப் பேரவைக்கு ஈடாக ஒரு செயற்குழு இயங்கும். இக்குழுவில் செயலர், உபசெயலர், பொருளாளர், மற்றும் திருவழிபாடு, திருவிவிலியம், மறைக்கல்வி, கல்வி, மனித நேயப்பணி, நிதி போன்றவற்றிற்கு ஒவ்வொரு பிரதிநிதி தெரிவு செய்யப்பட்டு இணைப்பாளர்களாக பணியாற்றுவர். இவர்களின் பணிக்காலம் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கும். தேர் வுகள் முறையாக அறிவிக்கப்பட்டு நடைபெறும் ஒரு பொதுவான ஒன்று கூடலில் இடம் பெறும்.

5.5 மேய்ப்புப்பணிப் பேரவைக்கான உறுப்பினர் தெரிவு இடம் பெறும் போது அவ்வாலயத்தில் ஆறுமாத காலத்துக்கு மேல் இடம் பெயர்ந்து வசிப்பவர்கள் அல்லது நிரந்தரமாக குடியேறியுள்ளவர்கள் மேய்ப்புப்பணிப் பேரவையிலே உறுப்புரிமை பெறும் தகுதியை பெறுகின்றனர். தேர்வு அடிப்படையில் இவர்களுக்கு உறுப்புரிமை கிடைக்காத பட்சத்தில் நியமன அடிப் படையில் இவர்களுக்கு உறுப்புரிமை வழங்கப்படும்.

6.0 அங்கத்தவரின் பணிக்காலம்

6.1 சபை அங்கத்தவரின் பணிக்காலம் இரண்டு ஆண்டுகள் மட்டுமே.

6.2 இரண்டு ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் ஒருவர் மறுபடியும உறுப்பினராகத் தெரிவு செய்யப்படலாம்.

6.3 சபையின் பதவிக்காலம் முடிவதற்கு ஒரு மாத காலத்திற்கு முன்பாகவே புதிய பதவிக்கான தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

6.4 பங்குக் குருவின் இடமாற்றம் இக் காலவரையறையைப் பாதிக்காது.

6.5 ஓர் உறுப்பினர் தாமாகவோ, பதவி நீக்கப்பட்டோ உறுப்புரிமையை இழக்கும்போது, பதிலாகப் பணியேற்பவரின் பணிக்காலம், உறுப்புரிமை இழந்தவருடைய எஞ்சிய பணிக்காலமே.

7.0 உறுப்பினர் பதவி துறத்தல், பணி நீக்கம்

7.1 ஆலய மேய்ப்புப்பணிப் பேரவை உறுப்பினர் தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்குச் சமூகம் அளிக்கத் தவறினால் உறுப்புரிமையை இழப்பர்.

7.2 பேரவை உறுப்பினர் பேரவையின் நோக்கங்களுக்கும், திருச்சபையின் சட்டங்களுக்கும் கிறிஸ்தவ நெறி முறைகளுக்கும் முரணாக நடப்பதாகத் தெரிந்தால், பங்குத் தந்தை அவரிடம் எழுத்து மூலம் விளக்கம் கேட்டு, அதை மேய்ப்புப்பணிப் பேரவைக்குத் தெரிவித்து, அவர்களின் ஆலோசனையுடன் தகுந்த முடிவு எடுப்பார்.

8.0 மேய்ப்புப் பணிப் பேரவைப் பொதுக் கூட்டம்

8.1 பங்குத் தந்தையே ஆலய மேய்ப்புப்பணிப் பேரவையின் தலைவர்.

8.2 முறையான மேய்ப்புப்பணிப் பேரவைப் பொதுக் கூட்டத்திற்கு குறைந்த பட்சம் அங்கத்தவர்களின் முழுத் தொகையில் அரைப் பங்கினராவது வருகை தந்திருத்தல் அவசியம்.

8.3 சாதாரண கூட்டங்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டும்.

8.4 கூட்ட அறிவித்தலும் கூட்டத்தின் விவாத விடயமும் ஒரு வாரத்திற்கு முன்பாக அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்படுதல் அவசியம்.

8.5 கூட்டத்திற்கான விவாத விடயங்களின் முன்மொழிவுகள் 15 நாட்களுக்கு முன்பாக எழுத்து மூலம் தலைவருக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

8.6 அவசரக் கூட்டமாயின், அதை தலைவர் மட்டுமே கூட்டலாம். அதற்கு ஒரு நாளுக்கு முன்னதாகவே உறுப்பினருக்கு அறிவித்தல்வழங்கப்பட வேண்டும்.

8.7 உறுப்பினரில் மூன்றில் ஒரு பங்கினருடைய எழுத்து மூலமான வேண்டுகோளுக்கிணங்க, ஆலய மேய்ப்புப்பணிப் பேரவையின் விசேட கூட்டம் நடைபெறும்.

(தொடரும்.....)

## மேய்ப்புப்பணி பேரவைகளுக் கையேடு ..... (1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வகையில், எமது மறை மாவடடத்தில் ஏற்கனவே நடைமுறையிலிருந்த ஆலய மேய்ப்புப்பணிப் பேரவைக்கான விதிகளைப் புதுப்பித்தும், பங்கு, மறைக்கோட்டம், மறைமாவட்ட மேய்ப்புப்பணிப் பேரவைகளுக்கான விதிகளை புதிதாக அமைத்தும், நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க நாம் தீர்மானித்தோம். அதன்படி, அவற்றிற்கான விதிகள் தயாரிக்கப்பட்டு, குருக்கள் அவையில் கலந்தாலோசிக்கப்பட்ட பின்பு நடைமுறைப்படுத்தலுக்காக இப்போது வெளியிடப்படுகின்றன. இவ்வருட இறுதியில் எமது மறைமாவட்ட மேய்ப்புப்பணிப் பேரவையைக் கூட்ட நாம் தீர்மானித்திருபபதால், அதற்கு முன்பாக ஆலய, பங்கு, மறைக் கோட்ட மேய்பபுப்பணிப் பேரவைகளை, வழங்கப்பட்டுள்ள விதிகளின்படி நடைமுறைப் படுத்து மாறு சம்மந்தப்பட்ட அனைவருக்கும் பணிப்புரை விடுக்கிறோம்.

மேற்படி பேரவைகள் உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்படுவதை உறுதிசெய்யவும், உதவிகள் வழங்கவும் குருமுதல்வர் தலைமையில் ஒரு குழுவை .நியமித்திருக்கின்றோம். வேண்டப்படும் இடங்களில் அக்குழுவின் உதவியோடு விரைவாக இவற்றை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பாக, எமது மறை மாவட்டத்தின் சில ஆலயங்களில் தமது பிரதேசத்தில் வாழும கத்தோலிக்கரை உறுப்பினராக இணைத்துக் கொள் வது தொடர்பாக திருச்சபைச் சட்டத் திற்கு புறம்பான நடைமுறைகள் காணப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட பங்கின் எல்லைக்குள் நிரந்தரமாக குடியிருக்கும் எண்ணத்துடன் ஒருவர் வாழ்ந்தாலோ அல்லது ஐந்து முழு ஆண்டுகள் வாழ்ந்திருந்தாலோ அவருக்கு நிரந்தர உறுப்புரிமை வழங்கப்பட வேண்டும். மேலும், ஒரு பங்கின் எல்லைக்குள் மூன்று மாதங்கள் குடியிருக்கும் எண்ணத்துடன் வாழ்பவருக்கு அல்லது மூன்று மாதங்கள் வாழ்ந்த ஒருவருக்கு தற்காலிக உறுப்புரிமை வழங்கப்பட வேண்டும் என்று திருச்சபைச் சட்டம் எண் 102 தெளிவாக தெரிவிக்கிறது. ஆகவே, இதனை உறுதியாக நடைமுறைக்கு கொண்டுவருமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

திருச்சபை இறையரசின் அருள அடையாளமாய் வாழ அழைக்கப்படுகிறது. குன்றிலிட்ட தீபமாக திருச்சபையின் வாழ்வு உலகில் ஒளிர வேண்டும். இத்தகைய வாழ்வை நாம் வாழ பெரும் உதவியாய் இருக்கக் கூடிய மேயபபுபபணிப் பேரவைகளை நல்ல மனதுடன் ஏற்று நடைமுறைப்படுத்துமாறு அனைத்து இறை மக்களையும் பணித்து நிற்கிறோம்.

## நாங்கள் இராணுவத்தால்... (1ம் பக்கத் தொடர்ச்சி)

**யுத்தத்தின் விளைவாகத் தமிழ் மக்கள் துன்பப்பட்ட போதெல்லாம் உங்களைப் போன்ற கத்தோலிக்க மத குருமார்கள் தொடர்ந்து குரல் கொடுத்துவந்துள்ளார்கள். இது பலனளித்திருக்கிறதா?**

நிச்சயமாகப் பயனுள்ளதாக இருந்திருக்கிறது. ஏனெனில் யுத்த காலத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று ஒருவரும் இருந்திருக்கவில்லை. அண்மையில் தான் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் அவர்களுக்காகக் குரல்கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அதற்கு முன்பு தமிழ் மக்களுக்காகப் பேசுவதற்கு யாரும் இருந்திருக்கவில்லை. ஆகையால் கத்தோலிக்கத் திருச்சபைக்குத் தன் குரலை ஓங்கி ஒலிக்க வேண்டிய தேவை இருந்தது. அரசியல் என்பது சமயததுக்கு அப்பாற்பட்டது என்றாலும், அரசியல்வாதிகள் யாரும் இல்லாத நேரத்தில் யாழ்ப்பாணத் திருச்சபை மக்களுக்காக் குரல்கொடுத்து அவர்களின் அவல நிலையை வெளிக்கொண்டு வந்திருக்கிறது. மக்கள் சார்பாக நாம் நின்றோம்.

**யாழ்ப்பாணம் வரும் உலகப் பிரதிநிதிகள் உங்களைச் சந்திக்கிறார்கள். இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பாக எத்தகைய மனநிலையைக் கொண்டிருக்கிறார்?**

அவர்கள் இங்கு வரும்போது ஆயரைச் சந்திக்க விரும்புவதற்குக் காரணம் நாங்கள் யாருடைய தூண்டுதலும் இல்லாமல், கட்சி சார்பு இல்லாமல் உண்மை நிலையைச் சொல்லுவோம் என்பதுதான். இங்கு வரும் பிரதிநிதிகளுக்கு எப்போதும் மக்களின் நிலைமைகளை விளக்குகிறோம். எங்களை வந்து சந்தித்துப் பேசும் போது அவர்களுக்கு முழுமையான தோற்றம் கிடைப்பதாக நம்புகிறார்கள். திருச்சபையிடமிருந்து அவர்கள் உண்மையான நிலவரங்களை அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். தமது அறிக்கைகளில் எங்கள் கருத்துகளை அவதானிக்கிறார்கள்.

**இலங்கைத் தமிழர்கள் இந்தியாவிடமிருந்து பெரிதாக எதிர்பார்த்தார்கள். அந்த நம்பிக்கை அவர்களுக்கு இன்னும் இருக்கிறதா?**

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்தியாவின் மீதான நம்பிக்கை போய்விட்டது. ஏனென்றால் கடந்த காலப் போரின்போது இந்தியா எங்களை முற்றாகக் கைவிட்டது. நானும் மற்ற ஆயர்களும் யுத்த 'காலத்தில் நேரடியாக இந்தியத் தூதராலயத்துக்குப் போய், 'சனங்கள் ஒவ்வொரு நாளும் செத்துக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். என்ன செய்யப்போகிறீர்கள்?' என்று கேட்டபோது 'ஒரு கட்டம் வரும். அப்போது நாங்கள் எல்லாவற்றையும் செய்வோம்' என்று சொன்னார்கள். ஆனால் எங்களின் சனங்கள் செத்து மடிந்துவிட்டார்கள். ஆகையால் இந்த நிலையில் இந்தியாவை நாங்கள் நம்பத் தயாராக இல்லை. இந்தியா நினைத்தால் இலங்கைத் தமிழர்களுக்கு ஏதாவது செய்யலாம். ஆனால் அவர்களும் அரசியல் சித்து விளையாட்டை விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். ராஜபக்ஷ அரசாங்கம் இப்போது சீனாவைச் சார்ந்து போய்க்கொண்டிருக்கிறது. சீனாவுக்குப் பின்னால் இலங்கை போய் விடும் என்னும் பயம் இந்தியாவுக்கு இருக்கிறது. ஆனால் தமிழருக்கு இந்தியாவால் எந்தப் பயனும் இப்போது இல்லை என்றுதான் நான் சொல்வேன்.

**யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதிக்கு அண்மையில் எப்போதாவது சென்றீர்களா? அங்கு அழிக்கப்பட்ட தேவாலயங்களின் தற்போதைய நிலைமை என்னவாக இருக்கிறது?**

அண்மையில் வன்னிக்குப் போய் வந்தேன். அங்கு தேவாலயங்கள் திருத்த வேண்டிய நிலைமையில் இருக்கின்றன. வன்னியில் 12 பங்குகள் இருக்கின்றன. ஒவ்வொரு பங்குக்கும் ஆறு அல்லது ஏழு தேவாலயங்கள் இருக்கின்றன. அங்கு தேவாலயங்களைத் திருத்தி வேலைசெய்ய வேண்டியிருக்கிறது. அங்கு குருமாரை அனுப்ப வேண்டியிருக்கிறது. புதுக்குடியிருப்பில் புனித சூசையப்பர் ஆலயம் முற்றாகக் குண்டு வீச்சில் பழுதடைந்து விட்டது.

**வன்னிக்குப் போயிருந்தபோது மக்கள் உங்களிடம் என்ன முறையிட்டார்கள்?**

அங்கே போனவுடன் மக்கள் எங்களிடம் கேட்ட முதல் வேண்டுகோள், ஒரு ஃபாதரைத் தாருங்கள் என்பதுதான். ஏனெனில் இராணுவத்தால் சூழப்பட்ட இடத்தில் ஃபாதர் இருந்தால் தாங்கள் பாதுகாப்பாக இருப்போம் என்று மக்கள் நினைக்கிறார்கள். தலைமைத்துவமாக நின்று அவர் பேசுவார் என்று மக்கள் நினைக்கிறார்கள். எல்லாத் தேவாலயங்களிலும் எங்களால் ஃபாதரை நியமிக்க முடியாது. ஆனால் ஒவ்வொரு பங்குக்கும் ஒவ்வொரு ஃபாதரை நியமித்து நாங்கள் அந்த மக்களைப் பாதுகாத்து வருகிறோம்.

**ஆலயங்களைத் திருத்துவதற்கு இலங்கை அரசாங்கம் உங்களுக்கு உதவுகிறதா?**

தேவையான வீட்டுத் திட்டத்தையே நிறைவேற்ற முடியாமல் இருக்கும்போது எப்படி ஆலயங்களுக்கு உதவுவார்கள்?

**வன்னி மக்களின் வீடுகள் எல்லாமே அழிந்துபோய் இருக்கின்றனவா? நீங்கள் போய்ப் பார்த்த போது எப்படி இருந்தன?**

கிட்டத்தட்ட எண்பது சதவீதமான வீடுகள் அழிந்து போய்விட்டன. அங்கு மக்கள் வசிக்க முடியாது. வீடுகளைக் கட்டுவது அரசாங்கத்தின் முக்கியமான பணிகளில் ஒன்று. ஆனால் அதைச் செய்வதற்கு அவர்கள் முயலவில்லை. தொண்டு நிறுவனங்களையும் உள்ளே அனுமதிப்பதில்லை. இப்போது ஓரிரு தொண்டு நிறுவனத்தினர் வேலை செய்கிறார்கள். அது போதவே போதாது. திருச்சபையைப் பொறுத்தவரை நாங்களும் சில வேலைத்திட்டங்களை மேற் கொண்டுவருகிறோம். பெரிய அளவிலான உதவி அந்த மக்களுக்குத் தேவைப்படுகிறது.

**மக்களின் இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக நீங்கள் அரசுடன் ஏதாவது பேசியிருக்கிறீர்கள்?**

ஒருமுறை அல்ல பல முறை பேசியிருக்கிறோம். அவர்கள் அதைப் பொருட்படுத்துவதில்லை. விவசாயம், மீன்பிடி முதலான தமிழ் மக்களின் வாழ்வாதாரம் சார்ந்த தொழில்களுக்கு உதவ வேண்டும். ஆனால் அரசு முழுமையாக எதையும் செய்யவில்லை. சிங்கள மக்கள் வாழும் பகுதிகளின் வளர்ச்சிப் பணிகளுக்கு முக்கியத்துவமளிக்கும் அரசாங்கம் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள எந்த முயற்சியும் மேற்கொள்ள முன்வராதது கவலை அளிக்கிறது. பாதைகள் போடப்படுகின்றன, பாலங்கள் கட்டப்படுகின்றன ஆனால் தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

**இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்தில் அரசாங்கம் இழுத்தடிப்பதற்கு என்ன காரணம்?**

தமிழர்களுக்கு இப்போது ஒன்றும் செய்யத் தேவையிலலை என்று இலங்கை அரசாங்கம் நினைக்கிறது. சாலை அமைத்தல், மின்சாரம் கொண்டு வருதல் போன்று சில பணிகளைச் செய்வதன் மூலம் சர்வதேச சமுதாயத்தை ஏமாற்ற நினைக்கிறது. இது வண்டிக்கு முன்னால் கட்ட வேண்டிய மாட்டைப் பின்னால் கட்டுவது போன்றதாகும். அரசாங்கம் எத்தகைய வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டாலும் அவற்றில் தமிழருக்கும் சமபங்கு அளிக்க வேண்டும். எங்களுக்கும் அதில் உரிமை இருக்கிறது. தமிழர்கள் இந்த நாட்டு மக்கள். சிங்களவர்கள் அனுபவிக்கும் உரிமைகள் அனைத்தையும் அவர்களும் அனுபவிக்க வேண்டும். எல்லோரும் சமமானவர்கள் என்னும் உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். அந்த மனநிலை ஆட்சியாளர்களுக்கு வர வேண்டும்.

**யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் நெருக்கடிகள் அதிகரித்திருப்பதாக நாங்கள் அறிகிறோம். நீங்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கிறீர்கள் அங்கு நிலைமை எப்படி இருக்கிறது?**

போருக்குப் பிறகு வடக்கு-கிழக்குத் தமிழர் பகுதிகளில் இருந்துவரும் இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்படும் என்னும் எதிர்பார்ப்பு எங்களுக்கு இருந்தது. இராணுவத்தினர் மீண்டும் தத்தம் இடங்களுக்குத் திரும்பி விடுவார்கள் என்று நினைத்தோம். ஆனால் அப்படி நடக்கவில்லை. இராணுவம் மேலும் அதிகமாகக் குவிக்கப்பட்டிருக்கிறது. அது மக்களின் இயல்பு வாழ்க்கையை முழுமையாகப் பாதிக்கிறது என்பது உண்மைதான். இராணுவக் குறைப்பு மிகவும் அவசியம் என்பதை நாங்கள் அரசாங்கத்துக்குச் சொல்லியுமிருக்கிறோம். இப்படிச் சொல்லும்போது இன்னும் பயங்கரவாத ஆபத்து இருப்பதால் இராணுவத்தைக் குறைக்க முடியாது என்று அரசாங்கம் சொல்கிறது. நாங்கள் 'இராணுவத்தால் சூழப்பட்டிருக்கிறோம் என்பதுதான் உண்மை. யாழ்ப்பாணத்தை மட்டும் கிட்டத் தட்ட நாற்பதினாயிரம் இராணுவத்தினர் சூழ்ந்திருக்கிறார்கள். சில இடங்களில் இராணுவம் மட்டும் தான் இருக்கிறது. நாங்கள் அச்சத்தோடு வாழ்கிறோம். சில இடங்களில் திடீர்ச் சோதனைகள் நடத்தப்படுகின்றன. வன்னிப் பிரதேசங்களில் இந்த நிலைமை கடுமையாக இருக்கிறது. சில இடங்களில் மீன்பிடிக்கக்கூடத் தமிழர்களை இராணுவம் அனுமதிப்பதில்லை. ஆனால் சிங்கள மீனவர்கள் இராணுவத்தின் உதவியோடு மீன்பிடிக்கிறார்கள். அது தமிழ் மக்கள் மத்தியில் கசப்பான விடயமாகும். எப்படி வாழ்வது என்ற 'கவலை எங்களுக்கு இருக்கிறது. இராணுவத்தினருடன் நாம் போய்க் கதைப்போம். ஆனால் சில விடயங்களைத் தங்களால் எதுவும் செய்ய முடியாது ஏனெனில் அது மேலிட உத்தரவு என்று சொல்வார்கள். பிரச்சினை என்னவெனில் அரசாங்கம், பாதுகாப்பு அமைச்சகம் ஆகியவை என்ன செல்கிறதோ அதன்படி அவர்கள் நடப்பதாகத் தெரிகிறது.

**யுத்தம் முடிவடைந்த பிறகு தமிழ்க் கலாச்சாரம் யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்படுகிறது என்ற அச்சம் தெரிவிக்கப்படுகிறது. அது சரியா?**

ஒரு பக்கத்தில் அரசாங்கம் புத்த சமயத்தைப் பரப்புவதற்கு முயல்வது தெளிவாகத் தெரிகிறது. ஏனென்றால் வடபகுதியில், யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் புத்தருடைய சிலைகள் வைக்கப்பட்டு விகாரைகளும் கட்டப்படுகின்றன. இதுவும் தமிழ் மக்கள் மத்தியில் ஒருவித அச்ச நிலையைத் தோற்றுவித்திருக்கிறது. அங்கு வாழும் மக்களில் பெரும்பாலானவர்கள் இந்துமக்கள். அவர்கள் வாழும் இடங்களில் புத்த விகாரைகளோ புத்தர் சிலைகளோ எதற்கு? முனபு மக்கள் கட்டுப்பாடுகளோடு இருந்தார்கள். போர் அவர்களை வேறு விடயங்கள் எதையும் யோசிக்கவிடாது தடுத்திருந்தது. போர் முடிந்தவுடன் மக்கள் ஒருவித சுதந்திர மனநிலையை உணருகிறார்கள். எல்லா வகையான போதைப் பொருட்களும் யாழ்ப்பாணத்தில் தாராளமாகக் கிடைக்கின்றன. இது இளைஞர்களைத் திசைதிருப்பிவிடுகிறது. சீரழிவுக்கு இதெல்லாம் காரணம் என்று நினைக்கிறேன்.'

அங்கு இருக்கும் இன்னுமொரு பிரச்சினையைப் பற்றியும் இங்கே சொல்ல வேண்டும். இராணுவம் விவசாய நிலங்களையும் மற்ற நிலப்பகுதிகளையும் அபகரித்திருப்பதால் விவசாயம், கைத்தொழில் போன்றவை முடங்கிப் போயிருக்கின்றன. தமிழ் மக்களுடைய வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பது பெருந்துயரம். நாற்பதாயிரம் இராணுவத்தினர் பெரும்பாலான நிலங்களை அபகரித்திருக்கிறார்கள். அது விவசாயிகளுக்குப் பாரிய தொரு பிரச்சினை. பாதுகாப்பு என்னும் பெயரில் அவர்களின் நிலங்களைக் கேள்வியில்லாமல் இராணுவத்தால் பிடுங்கிக்கொள்ள முடியும்.

**யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கடத்தல்களை யார் செய்வது? தொடர்ச்சியாக இந்தப் பிரச்சினை இருக்கிறது அல்லவா?**

ஆள் கடத்தல்கள். வெள்ளை வேன் கடத்தல்கள் கொழும்பில் அதிகமாக நடக்கின்றன. யாழ்ப்பாணத்திலும் நடக்கின்றன. சிலர் அச்சத்தின் காரணமாக வெளியில் சொல்லாமல் இருக்கிறார்கள். கடத்தல்களுக்கு யார் காரணம், இராணுவத்துக்கும் இதற்கும் தொடர்பு இருக்கிறதா, வேறு கட்சிகளுக்குத் தொடர்பு இருக்கிறதா என்னும் குழப்பமான நிலையே நிலவுகிறது. எங்களுடைய பாதிரிமார் இரண்டு பேரைக்கூட மக்களின் கண் முன்னால் கடத்திக்கொண்டு போனார்கள். அவர்கள் இன்னும்கூட விடுவிக்கப்படவில்லை. ஆள் கடத்தல் என்பது பெரிய பிரச்சினை.

**எல்.எல். ஆர்.சி. என அழைக்கப்படும் கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் நீங்கள் சாட்சியமளித்தீர்கள். அவர்களிடம் என்ன சொன்னீர்கள்?**

ஆம். சாட்சியமளித்தேன். அதில் 'கடத்தப்பட்ட மக்களை விடுவியுங்கள். காணாமல்போன ஆட்களைப் பற்றிய தகவல்களைத் தாருங்கள்'' என்று கேட்டேன் தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்கள் அல்ல என்ற விடயத்தையும் அவர்களுக்குச் சொன்னேன். தமிழர்களுக்கச் சம உரிமை வேண்டும். அவர்களது மொழி, கலாச்சாரத்தைப் பின்பற்றுவதற்கான சூழல் ஒன்றுபட்ட இலங்கைக்குள் உருவாக்கபபட வேண்டும்.

**எல்.எல். ஆர்.சி. அறிக்கையைப் படித்தீர்களா? அது தமிழர்களுக்கு ஏதாவது பயனுள்ள விடயத்தைச் சொல்லியிருக்கிறதா?**

அது முழுமையான அறிக்கை என்று சொல்வதற்கில்லை. அந்த ஆணைக்குழு உருவாக்கப்பட்டதே சர்வதேசச் சமுதாயத்திடமிருந்து வந்த அழுத்தங்களைச் சமாளிப்பதற்காகத்தான். அதில் உள்ள சில அம்சங்கள் ஓரளவு பயனுள்ளவை. அவற்றையாவது அமுல்படுத்த அரசாங்கம் முன்வரவேண்டும். ஆனால் அரசாங்கம் அதை அலட்சியப்படுத்துகிறது. இலங்கை அரசாங்கத்துக்குத் தமிழ் மக்கள்மீது எந்தவிதமான அக்கறையும் இல்லை போலத்தான் தோன்றுகிறது. சர்வதேச சமுதாயத்தின் அழுத்தங்கள் இல்லாவிடில் எதுவும் நடக்காது எனச் சந்தேகிக்கத் தோன்றுகிறது. ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்திற்குப் பிறகு இலங்கை அரசு கொஞ்சம் பயந்ததுபோல் காணப்படுகிறது. இலங்கை அரசை மனித உரிமைகளுக்கு எதிரான அரசாக சர்வதேச சமுதாயம் நோக்குகிறது என்னும் விடயம் இலங்கை அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் விஷயம். நாங்களும் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக எங்களுடைய கத்தோலிக்க ஆயர் சங்கத்தினூடாக வத்திக்கானுக்கு அறிக்கை சமர்பித்துக்கொண்டிருக்கிறோம். நாங்கள் தமிழர்கள் சிங்களவர்களுக்குச் சமமான உரிமை எங்களுக்கும் இருக்கிறது. அதை முழுமையாக நாங்களும் அனுபவிக்க வேண்டும். தமிழ் மக்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். இவற்றைத்தான் நான் மீண்டும் அழுத்திச் சொல்வேன்.

நன்றி - காலச்சுவடு



# கொலை கலையாகி விட்டதோ?

அலசலும் உரசலும்

(சமகால சமூக ஆன்மீக தொடர்) 08

அருள் முனைவர் ஸ்ரனி அன்ரனி அ.ம.தி.

இன்று நாம் வாழும் உலகம் வன்முறை நிறைந்த உலகமாக மாறி வருகின்றது. கடவுள் நல்லதெனக் கண்ட உலகம் நலமிழந்து மானிடத்தின் இருப்பையே கேள்விக் குறியாக்குமளவிற்கு வன்முறைகளின் பூமிப்பந்தாக உருமாறி வருவதை கண்கூடாக காணுகின்றோம். அமைதி என்பது தொலைவிலே தெரியும் தூரத்து பச்சையாக மாறியுள்ளது. மனித இதயங்களில் மனமாற்றம் ஏற்படாதவரை கொலைகளும், வன்முறைகளும், போர்களும் தொடர்ந்து மனித முகத்தை அழிவின் பாதையிலே இட்டுச் செல்லும் நிலையை தோற்றுவித்துள்ளது. எமது தமிழ் சமூகமும் ஒரு உளப்பிறழ்வு சமூக மாக உருமாற்றம் பெறும் நிலை தோன்றியுள்ள ஒரு அவலமான நிலையை கோடிட்டு காட்டுகின்றது. கொலைக் கலாச்சாரம் இன்றும் எமது சமூகத்தில் ஓய்ந்தபாடாக வில்லை.

### கடவுள் ஓரம் கட்டப்பட்டுள்ள நிலை

இன்று எமது பகுதிகளில் ஆலயங்களுக்கும், கோவில்களுக்கும் வஞ்சமில்லை என்பது உண்மையாகும். போரினால் அழிந்து போன ஆலயங்களும், கோவில்களும் புனருத்தாரணம் செய்யப்பட்டு, அழகுபடுத்தப்பட்டுவருவதை காணுகின்றோம். இன்றும் வழிபாடுகளில் தாராள மயமாக்கல் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஏராளமான பணமும் இதற்காக செலவிடப்படுகின்றது. ஆனால் இவற்றிற்கு நிகராக சமூக விரோதச் செயல்களும், கொலைகளும், வன்புணர்வு கலாச்சாரமும், கலாச்சார சீரழிவுகளும் எமது மண்ணில் பெருகிவருவதை காணுகின்றோம். வெற்று கட்டிடங்களால், கற்களால் மனித இதயங்களை கட்டியெழுப்ப முடியாது என்பது உண்மையே. மதங்கள் இருந்தும், மதவழிபாடுகள் தொடர்ந்து இடம் பெற்றாலும் மனிதமனங்களை அவை தொட்டதாக தெரியவில்லை. இறைப்பற்றும், இறையுணர்வும் அருகிவருவதையையே காணுகின்றோம். வாழ்விற்கும வழிபாட்டிற்குமுள்ள இடைவெளி அதிகரித்து செல்வதையே காணுகின்றோம். போரின் பின் விளைவுகளா அல்லது சமூகத்தில் செல்வாக்கு செலுத்தும் நுகர்வு, தொடர்பு சாதன ஆக்கிரமிப்பினால் கடவுளின் செல்வாக்கு சரிந்து செல்லும் நிலை காணப்படுகின்றதா என்ற வினா இயல்பாகவே எழுகின்றது. இன்று மதங்கள் கூட சிலவேளைகளில் மக்களின் இதயங்களை தொடாத மாற்றத்திற்கு தயாராக இல்லை என்பதை மேலோட்டமான மதக் காரியங்களை முன்னுரிமைபபடுத்தி மக்களை ஆழமான வாழ்வு மாற்றத்திற்கு இட்டுச் செல்வதற்கு தடையாக சிலவேளை மாறியுள்ளதை காணலாம். இன்று மதத்தை பின்பற்றும் வாழ்க்கை முறைகூட ஒரு பகுதிநேர (Part time) வேலை போல் மாறியுள்ளது.

### மதத்திலிருந்து விடுதலை வேண்டும்

மதம் பிடித்து விட்டால் அது வாழ்விற்கு உதவாது என்பார்கள். இதை நியாயத்திற்கும் பகுத்தறிவிற்கும் அப்பாற்றபட்ட ஒரு தீவிரப் போக்கு. என்று கூறலாம். இது ஒருவிதத்தில் தீவிரமான போக்குக் கொண்ட ஒரு மேலோட்டமான தவறான கருத்தியல் என்று கூட சொல்லலாம். மதப்பித்து அல்லது மதவெறி (Fanatism) என்று கூடச் சொல்லலாம். இன்று மதத்தின் பெயரால் நடக்கும் அநீதிகள், ஏன் கொலைகள் கூட மதவெறிபிடித்தவர்களால் நடாத்தப்படுகின்றன. மதத்தைபற்றி எழுதுவதற்கு, மதத்திற்காக எதனையும் செய்வதற்கு தயாராகவுள்ளனர், ஆனால் மதக்கோட்பாடுகளை வாழ்வதற்கு இவர்கள் தயாராக இல்லை. மதம் போதனைகளை, சடங்குகளை, சொந்த வழிமுறைகளை, அமைப்புக்களை கொண்டுள்ளது எனலாம். சிலவேளைகளில் அமைப்பையும் இருப்பையும் காத்துக்கொள்ள மதத்தின் பெயரால் அநீதிகள் இடம் பெறுகின்றன. இதனால் மதம் வெறுமனே கோட்பாட்டு கருத்தியலில் நோக்கப்படுவதால் வாழ்வை தொடுவதில்லை. இதன் விளைவாக இதயங்களில் மாற்றம் ஏற்படுவதற்கான சாத்தியமில்லை. இன்று போதனைகளை விட சாட்சியமுள்ள வாழ்வே தேவை. இதன் அடிப்படையிலேயே மதத்திலிருந்து முதலில் விடுதலை பெற வேண்டும். இதனால் ஆனமீகம் என்பது வெற்று சடங்குகளாக மாற்றப்பட்டு, வாழ்க்கை அனுபவமாக மாறுகின்ற அளவிற்கு இதனை மாற்ற சமயத் தலைமைகளும் சிந்திப்பதாக இல்லை. எனவே மதங்கள் இருந்தும் வன்முறைகள் தொடர்கின்றன.

### மதங்கள் மலடாகிவிட்டதா?

மதங்களை மலடாக்கிவிட்டோமோ அல்லது அவை மலடாகிவிட்டதா என்ற வினா வன்முறைகளை இன்று நோக்குகின்றபோது எழுகின்றது. மதங்கள் தன்னியல்பில் மனிதனை நல் வழிப்படுத்தும் போதனைகளை, கட்டளைகளை கொண்டுள்ளது. அவை திசை காட்டிகளேயொழிய இலக்குகளல்ல. கிறிஸ்துவும் ஒரு மதத்தை போதிக்க வரவில்லை. மாறாக கடவுள் சார்ந்த ஒரு வாழ்க்கை முறையை கட்டியெழுப்பவும், மனிதம் சார்ந்த நிறைவான வாழ்வும், புனிதமும் கடவுளையும், மனிதனையும் இணைத்தே நோக்கப்பட வேண்டுமென்பதே அவரது போதனையின் நோக்கமாக இருந்தது. புனிதம் என்பது வழிபாடுகளில் மட்டுமல்ல அடுத்தவனின் துன்பங்களை களைவதிலும், நன்மைத்தனமான வாழ்க்கை முறையிலுமே தங்கியுள்ளது என்பதை வலியுறுத்தினார். ஆனால் இன்று மதங்கள் மேலோட்டமான வழிபாடுகளை, சமயச் சடங்குகளை மட்டும் ஊக்குவிக்கும் நிலையில் எப்படி மனித மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்? கோவில் இல்லா ஊரில் குடியிருக்காதே என்பார்கள். உண்மைதான்! ஆனால் இன்று கோயில்களும், மதங்களும் மனித வாழ்வின் மாற்றத்திற்குரிய வழிமுறைகளை முன்னுரிமைப்படுத்தி ஒவ்வொரு மானிடனும் இறைவன் வாழும் ஆலயமாக மாற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றதா என்பது கேள்விக் குறியே! வாழ்வை தொடாத பக்தி பரவசமான, உணர்வு சார்ந்த ஆன்மீக முயற்சிகள் மனித இதயங்கள் பண்படுத்தாது என்பதை மதத் தலைமைகள் உணர வேண்டும். மனித இதயங்களை பண்படுத்தும் வழிமுறைகளை தேட வேண்டும். மதத்தின் இருப்பை, அமைப்பை கட்டிக்காப்பத்தில் முழுமையாக ஈடுபடும்போது வன்முறைகளும், கொலைககலாச்சாரமும், சலாச்சார சீரழிவுகளும் சீராக்கப்பட வாய்ப்பு இல்லை. மதத்திலிருந்து விடுதலை பெறுவோமா?

(உரசல் தொடரும்)

## கோபப்படுவோர் ஏன் கூச்சலிடுகின்றனர்

ஒரு புனிதர் சீடர்களிடம் வினவினார் "கோபப்படுவோர் ஏன் கூச்சலிடுகின்றனர்?"

நிலை தடுமாறும்போது மக்கள் ஏன் ஒருவருக்கொருவர் கூச்சலிடுகின்றனர்?

சீடர்கள் சிறிது சிந்தித்தபின் ஒருவர் கூறினார் காரணம் நாம் எமது அமைதியை இழக்கிறோம் அதனால் கூச்சலிடுகின்றோம். மற்றவர் அருகிலிருக்கும்போது ஏன் கூச்சலிட வேண்டும்? புனிதர் வினவினார். மற்றவர் அருகிலிருக்கும்போது மெதுவாகப் பேசலாமே? கோபப்படும்போது மட்டும் ஏன் நாம் கூச்சலிட வேண்டும். சீடர்கள் கூறிய விடைகள் திருப்தியளிக்கவில்லை. இறுதியாக அவர் கூறினார் இருவர் கோபப்படும்போது அவர்கள் இதயங்கள் வெகு தொலைவில் உள்ளன. அந்த தூரத்தை எட்டும்படி அவர்கள் கூச்சலிடுகின்றனர். எவ்வளவு தூரம் கோபப்படுகின்றனரோ அவ்வளவு தூரம் அவர்கள் கூச்சலிடுகின்றனர்.

புனிதர் மீண்டும் வினவினார் இருவர் அன்பில் ஒன்றித்தால் என்ன நடக்கின்றது? ஏன் அவர்கள் கூச்சலிடுவதில்லை தாழ்ந்த குரலில் பேசுகின்றனர்? காரணம் அவர்கள் இதயங்கள் வெகு அருகில் உள்ளன. அவர்களின் இடைத் தூரம் மிகக் குறுகியது....!

புனிதர் மீண்டும் தொடர்ந்தார். இதையும் விட மேலாக அன்பு செய்பவர்கட்கு என்ன நடக்கின்றது? அவர்கள் காதோடு காதாக பேசி அன்பினால் நெருக்கமாகின்றனர். இறுதியில் அதுவுமின்றி ஒருவரை ஒருவர் உற்று நோக்குகின்றனர். இருவர் அன்பு செய்யும்போது ஏற்படும் நெருக்கம் இதுவே.

வாக்குவாதப்படும்போது சொல்லும் வார்த்தைகள் இதயங்களை தூர விலக்காது இருக்கட்டும். வார்த்தைகள் இதயங்களை தூர விலக்கினால் அவை திரும்பிவர வழிதெரியாத ஒரு நாளும் வரலாம்.

## "இணையத்தளம்மீது இளையோர் கொண்டுள்ள கட்டுப்பாடற்ற ஈர்ப்பு" – கத்தோலிக்கக் கருத்தரங்கு

பேஸ்புக், ருவிற்ரர் போன்ற இணையத்தள நடவடிக்கைகளில் இளையோர் அளவுக்கதிகமான நேரம் செலவ்ழிப்பதால், அவர்கள் அடைய வேண்டிய வளர்ச்சியும், வாழ்வில் பெற வேண்டிய உறவுகளும் பெருமளவு பாதிக்கப்படுகின்றன என்று கத்தோலிக்க பல்கலைக் கழகமாணவர் அமைப்பு ஒன்று கூறியுள்ளது. கிழக்கு ஆசிய நாடுகளின் கத்தோலிக்க பல்கலைக் கழக மாணவர் அமைப்பு அண்மையில் நடத்திய ஒருவாரக் கருத்தரங்கில் "இணையத்தளம் மீது இளையோர் கொண்டுள்ள கட்டுப்பாடற்ற ஈர்ப்பு" என்ற தலைப்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இணையத் தளத்தில் இளையோர் அளவுக்கதிகமான நேரம் செலவிடுவதால் அவர்களது விசுவாச வாழ்வு உட்பட வாழ்வின் பல்வேறு அம்சங்களில் கவலை தரும்போக்கு அதிகரித்துள்ளது என்பதைக் குறித்து பேசினார்கள்.


## குருத்துவ பொன்விழா நினைவஞ்சல்

### அருட்திரு ஜோ. பெர்னாண்டோ (யாழ் மறைமாவட்டம்)

பிறப்பு 21 - 11 - 1935



இறப்பு 28 - 07 - 1980

குருவாக திருநிலைப்படுத்தல் 01-09-1962

"ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை" (தி.பா 23:1)

உன்னத குரு இயேசுவின் அருளால், குருத்துவப் பணியில் 18 ஆண்டுகள் அரும்பணியாற்றிய பாசமுள்ள அருட்தந்தை அவர்கள் தமது 45ம் வயதில் இறைபதம் சேர்ந்தார். இயேசு கூறுவந்த நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்வோம்.

"எனக்குத் தொண்டு செய்வோர் என்னைப் பின்பற்றட்டும். நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பர்" (யோவான் 12:26).

குருத்துவ பொன்விழாவின் போது இவரை நினைத்து இவருக்காக செபிப்போம்.

அன்புடன் நினைவுறும் சகோதரர்கள், சகோதரிகள், உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள்.

Add: 81/12

# அல்லைப்பிட்டி புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கு அஞ்சலி

அல்லைப்பிட்டி புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தின் மீது 2006ஆம் ஆண்டு இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் அடைக்கலம் தேடி ஓடிய 20 வரையான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் பல பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் ஆறாவது ஆண்டு நினைவு நிகழ்வுகளும் பிராத்தனைகளும் 13ம் திகதி மாலை புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் நடைபெற்றது. அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி. எஸ். இரட்னராஜ் இந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கி அஞ்சலி நிகழ்வுகளை நடத்தி வைத்தார்.

இந்த தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள், நண்பர்களென பெருமளவானோர் கண்ணீர் மல்கியவர்களாக அஞ்சலி செலுத்தினர். இறந்தவர்களின் ஆத்மாக்கள் சாந்தி பெறவேண்டி அனைவரும் சிறப்புத் திருப்பலியிலும், பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

## யாழ் தூய மரியன்னை பேராலய வருடாந்தப் பெருவிழா

புனித அன்னை மரியாளின் விண்ணேற்புத் தினமான ஆவணி 15ம் நாளன்று தூய மரியன்னை பேராலய வருடாந்த திருவிழா நடைபெற்றது. 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்த நவநாட்கள் தினமும் மாலை 5.00மணிக்குத் திருச்செபமாலையுடன் ஆரம்பமாகித் திருப்பலியுடன், அன்னையின் ஆசீர் வேண்டி நிறைவுபெற்றது.

தமிழ் மறைமாவட்ட ஆயர்கள் இவ்வாண்டை மறைக்கல்வி ஆண்டாகப் பிரகடனப்படுத்தியதன் பிரகாரம், மறையுரைகள் அனைத்தும், ஒவ்வொரு கிறிஸ்தவனும் சிறியோர் முதல் பெரியோர் வரை கிறிஸ்துவில் அனுபவ முதிர்ச்சி பெறும் வகையில், மறையுரைஞர் அருட்பணி. ராஜ் கிளேயர் அ.ம.தி அவர்களால் நெறிப்படுத்தப்பட்டது.

நற்கருணைப் பெருவிழாத் திருப்பலி அருட்தந்தை A. J. நீக்கிலஸ் அடிகளாரின் தலைமையிலும், பெருவிழாத் திருப்பலி காலை 6.45 மணிக்கு அருட்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளாரின் தலைமையிலும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. கத்தோலிக்கத் திருச்சபையில் அன்னைமரியின் இடம் சிறப்பானது எனவும், அன்னை மரிக்கு அனைத்துப் புனிதர்களிலும் சிறப்பான வணக்கம் செலுத்தப்படுவதையும், அன்னையின் பரிந்துரை திருச்சபைக்கு இன்றியமையாதது என்பது பற்றியும் மறையுரை அமைந்தது சிறப்பம்சமாகும். அத்துடன் அன்னை மரியாளின் உடல் கல்லறையில் அழியாமல் பாதுகாக்கப்பட்டது அன்னையின் புனித வாழ்வும், இறைவார்த்தையை வாழ்வாக்கியமையும், இறைவனுக்கு அவள் கொடுத்த பதிலும், சிலுவை வரை அவளுடைய பிரமாணிக்கமுமாகும் என கோடிட்டுக் காட்டப்பட்டது. மாலை 5.00மணிக்கு அன்னையின் திருச்சுரூப பவனி ஆரம்பமாகி அன்னையின் திருச்சுரூப ஆசீருடன் நிறைவுபெற்றது.

## "உன்னதரே சரணம்" இறுவட்டு வெளியிடப்பட்டுள்ளது




அருட்பணி. றெனோல்ட் ஜோர்ஜ் அவர்கள் தயாரித்து உருவாக்கிய "உன்னதரே சரணம்" என்ற இறுவட்டு 11-08-2012 சனிக்கிழமை மாலை வெள்ளவத்தை Hostel Sapphire இல் அருட்தந்தையின் பெற்றோர் திருவாளர் ஜோர்ஜ் திருமதி ரூபி ஆகியோரது திருமண பொன்விழா நிகழ்வில் வெளியிடப்பட்டது.

இவ் இறுவட்டு திருப்பலி, இசை, நடன பாடல்களைக் கொண்டுள்ளது. இப்பாடற்தொகுப்பை புனித வளன் கத்தோலிக்க விற்பனை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். பிரதி ஒன்றின் விலை ரூபா. 150/=

# ஆறு ஆண்டுகள் கடந்தும் முடிவற்ற விசாரணைகள்



அருட்பணி. T. N. ஜிம்பிறவுண அடிகளார் அல்லைப்பிட்டியில் 20-08-2006இல் காணாமல் போக செய்யப்பட்டார். இவர் எங்கே இவருக்கு என்ன நடந்தது யார் இதை செய்தார்கள் என்பதை வெளிக்கொணர விசாரணைக் குழுவொன்று அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டது. ஆறுவருடங்கள் கடந்தும் முடிவற்ற விசாரனைகளாக விசாரிக்கப்படாத விசாரணைகளாகவே இருக்கின்றது.

### ஜிம்பிறவுண்

நேற்றுப்போல் இருக்கிறது
நீ வந்து போனது...
ஆறு ஆண்டுகள் மறைந்து போயின
எப்படி மறப்பது?
மறைக்கப்பட்டது உன் சாவா?
அல்லது உன்னை
மறைத்துத்தான் இன்னும்
வைத்துள்ளார்களா?
காணத் துடிக்கின்றோம் – உன்
தியாகத் திருமுகத்தை
நீ காணாமல் போய்விட்டாய்
என்று எம் நாட்டில்
ஏகாதிபத்திய சரித்திரத்திலேயே
தொலைந்து போன ஆயிரம் ஆயிரம்
சனங்களோடு உன்னையும்
நினைத்துவிட
கஸ்ரப்படுதே நெஞ்சம்.
கனவிலாவது வந்து சொல்லிவிடு
உனக்கு என்ன நடந்தது என்று
ஆறுதலுக்கு வார்த்தைகளை தேடி
யாருக்கு யார் சொல்வது!
உன்னோடு
பழகியவர்களுக்குத் தான் தெரியும்
உனது
தியாகமும் அன்பும் விடா
முயற்சியும்
பிறர் துன்பம் கண்டு துடிப்பாயே!!
நாங்கள்
பரிசாகப் பெற்றது
உனது பெயரையும்
காணமல் போனோர்
பட்டியலில்தானே!
நீ உண்மைக்காக போராடினாய்
நீ அஞ்சவில்லை ஆயுதங்களுக்கு
நீ துணிந்து நின்றாய்
துன்பம் தருபவர் முன்னால்
நீ வாழ்கின்றாய்
ஒவ்வொரு தமிழன் நெஞ்சிலும்.

## மனித உயிருக்கு ஆதரவாக அமெரிக்க இளையோர் – நடைபயணம் –

மனித உயிருக்கு ஆதரவு தரும் நோக்கத்துடன் 40க்கும் மேற்பட்ட அமெரிக்க இளையோர் நாடு முழுவதும் மேற்கொண்ட நடைபயணம் அண்மையில் வாஷிங்டன் நகரில் நிறைவுபெற்றது.

கிறிஸ்தவமறையின் தூண்களாக விளங்கும் திருத்தூதர்கள், உயிர்களைப் போற்றும் கலாச்சாரத்தை வளர்த்தது போல், இளையோரும் உயிரைப் போற்றி வளர்க்க வேண்டும் என்று 1993ம் ஆண்டு திருத்தந்தை அருளாளர் இரண்டாம் ஜோன்போல் உலக இளையோர் நாளில் விடுத்த அழைப்பின் அடிப்படையில் 1995ம் ஆண்டு குறஸ்றோட்ஸ் (Crossroads) என்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது.

மனித உயிரை மதிக்காமல், கருக்கலைப்பு, கருத்தடை போன்ற செயற்பாடுகள் பெருகிவரும் அமெரிக்க மண்ணில், மனித உயிர்களை மதிக்க வேண்டும் என்ற விருதுவாக்குடன் குறஸ்றோட்ஸ் அமைப்பைச் சேர்ந்த இளையோரால் இவ்வாண்டு மே மாதம் 19ம் திகதி அமெரிக்க ஐக்கிய நாட்டின் மேற்குக் கடற்கரையில் ஆரம்பமான இந்த நடைபயணம், 40 மாநிலங்கள் வழியே மேற்கொள்ளப்பட்டது. இந்த முயற்சியில் ஈடுபட்ட இளையோர், ஒவ்வொரு மாநிலத்திலும் பல ஆலயங்களில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். அதே நேரம் அப்பகுதிகளில் அமைந்திருந்த கருக்கலைப்பு மருத்துவமனைகளுக்கு முன் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர்.

குறஸ்றோட்ஸ் அமைப்பையொத்த இளையோர் அமைப்புக்கள் கனடா, அயர்லாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று CNA கத்தோலிக்கச் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

## முல்லைத்தீவு பங்கின் புனித இராயப்பர் ஆலய திருவிழா

முல்லைத்தீவு பங்கின் பாதுகாவலராம் புனித இராயப்பரின் திருவிழா திருப்பலி 01-08-2012 அன்று காலை 7.00 மணிக்கு அருட்தந்தை ஜோய் அடிகளாரின் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு திருச்சுருபப் பவனியுடன் திருப்பலி நிறைவு பெற்றது. பின்பு புனித இராயப்பர் ஆலய இளைஞர் மன்றத்தினரால் படகு ஓட்டப் போட்டியும், அதனைத் தொடர்ந்து மாலை 4.30 மணியளவில் சிறுவர்களுக்கான, பெரியவர்களுக்கான விளையாட்டுக்களும், பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

[illegible] முல்லைத்தீவு

## பிலிப்பின்ஸ் அரசுக்கு அந்நாட்டு ஆயர்கள் பேரவையின் வன்மையான கண்டனம்

மக்கட்பேறு நலன் பற்றிய பிரச்சினைகள் நிறைந்த ஒரு சட்டவரைவை தகுந்த கலந்தாலோசனைகள் இன்றி சட்டமாக்க பிலிப்பின்ஸ் அரசு காட்டும் அவசரத்தை அந்நாட்டு ஆயர்கள் பேரவை வன்மையாக கண்டித்துள்ளது.

ஆயர்கள் பேரவை வெளியிட்ட அறிக்கையில் மக்களின் மனச்சாட்சிக் குரலை ஒடுக்குவதற்கு அரசு பயன்படுத்தும் சக்தி அடக்கு முறைக்கு ஒப்பாகும் என்று ஆயர்கள் கூறியுள்ளனர்.

பிரச்சினைக்குரிய இந்தச் சட்டம் அமுலாக்கப்பட்டால் 5ம் வகுப்பில் பயிலும் சிறுவர், சிறுமியருக்கு பாலியல் கல்வியை கட்டாயமாகப் புகட்டுதல் கருத்தடை சாதனங்கள் அனைவருக்கும் எளிதில் கிடைக்க வழிசெய்தல் ஆகியவை நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கின்றது.

இந்த சட்ட வரைபு பாராளுமன்றத்தில் நுழைக்கப்பட்டது முதல் தற்போது அதனை சட்டமாக்கும் அவசரம் வரை அரசு மேற்கொண்டுள்ள அனைத்து செயற்பாடுகளும் மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என்று பிலிப்பின்ஸ் ஆயர் பேரவை தலைவரும் செபு (Cebu) பேராயருமான ஜோசே பால்மா (Jose Palma) கூறியுள்ளார்.

# நைஜீரிய பேராயருக்கு அகில உலக பக்ஸ் கிறிஸ்ரி (Pax Christi) விருது

ஆப்ரிக்காவின் நைஜீரியாவில் அபுஜா பேராயர் ஜோன் ஒநாயேகான் (John Onaiyekan) அவர்களுக்கு ஒக்டோபர் மாதம் 31ம் திகதி அகில உலக பக்ஸ் கிறிஸ்ரி விருது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வன்முறைகளற்ற உலகை உருவாக்குதல், அமைதி, நீதி, போன்ற உயர்ந்த கொள்கைகளுக்காகப் பணியாற்றி வருவோருக்கு பக்ஸ் கிறிஸ்ரி அமைப்பு விருதுகள் வழங்கி வருகிறது. 2012ஆம் ஆண்டுக்கான இவ்விருதை அபுஜா பேராயர் ஒநாயேகன் அவர்களுக்கு வழங்க இவ்வமைப்பு முடிவு செய்துள்ளது. வன்முறைகளைச் சந்தித்து வரும் நைஜிறியாவில் கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியருக்கும் இடையே மத நல்லிணக்கத்தையும் அமைதியையும் உருவாக்க பேராயர் மேற்கொண்டுவரும் முயற்சிகளைப் பாராட்டி இவ்விருது அவருக்கு வழங்கப்படுகிறது. உரையாடல் மூலம் மக்களிடையே ஒற்றுமையைக் கொணர முடியும் என்ற கொள்கைக்கு இவர் ஒரு எடுத்துக் காட்டாக விளங்குகிறார் என்று விருதுக்குழுவினர் கூறியுள்ளனர்.

## தினமும் செபமாலை சொல்வோம்

புரட்டாதி மாதம் செபமாலை அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம். இம்மாதத்தில் அன்னை மரியின் பரிந்தரையை வேண்டி எம் குடும்பத்திற்காகவும் எம் சமூகத்திற்காகவும் எம் நாட்டு அமைதிக்காகவும் குடும்பமாக ஒன்று கூடி திருச்செபமாலையை பக்தியுடன் செபிப்போம்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக [illegible] யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2012 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.